Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

தமிழ் Mirror

www.tamilmirror.lk

TUESDAY, MARCH 22, 2022

செவ்வாய்க்கிழமை மார்ச் 22, 2022 | ஒளி: 07 கதிர்: 262 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | FREE

# காவுகொள்ளும் எரிபொருள் வரிசை

## மயங்கி விழுந்து மற்றுமொருவர் மரணம்; கத்திக்குத்தில் இளைஞன் பலி

## நாட்டில் அண்மைக்காலமாக நிலவும் எரிபொருள் வரிசையால் 04 பேர் உயிரிழந்துள்ளனர்.



ஒருகொடவத்தையில் நேற்று (21) இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின் போது.... (படம்: நிஷால் பதுஹே)

மீரிகம, எரிபொருள் நிரப்பு நிலையத்தில் நேற்றையதினம் (21) வரிசையில் நின்று எரிபொருள் வாங்கிக்கொண்டு, அங்கிருந்து புறப்பட முயன்ற 76 வயதான நபரொருவர் மயங்கி விழுந்து, வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளதாக மீரிகம பொலிஸார் தெரிவித்தனர்.

ஓட்டோவில் வந்து, மூன்று கேன்களில் எரிபொருள் வாங்கிய குறித்த நபர், இரண்டு கேன்களை எடுத்துச் சென்று ஓட்டோவில் வைத்து விட்டு, மூன்றாவது கேனை எடுத்துச் செல்லும் போது கீழே விழுந்துள்ளார்.

பாதுகாப்பு கடமையில் இருந்த பொலிஸார், மீரிகம ஆதார வைத்தியசாலையில் அவரை அனுமதித்த போதும் அவர் ஏற்கெனவே உயிரிழந்துள்ளதாக வைத்தியசாலைத் தரப்பு தெரிவித்துள்ளது.

இதேவேளை, நிட்டம்புவ, ஹொரகொல்ல பகுதியிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையமொன்றில் ஏற்பட்ட சண்டையால், கத்திக் குத்துக்கு இலக்காகி 29 வயதான இளைஞன் ஒருவர் உயிரிழந்துள்ளார் என நிட்டம்புவ பொலிஸார் தெரிவித்தனர்.

ஓட்டோ சாரதிக்கும், மோட்டார் சைக்கிள் ஓட்டுநரான குறித்த இளைஞனுக்கும் இடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கமே இந்தக் கத்திக் குத்துக்கான காரணம் எனத் தெரிவித்த பொலிஸார், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

தொடர்ச்சி P2

பொரளை கைக்குண்டு:

## ஓய்வு பெற்ற வைத்தியருக்கு பிணை

பொரளை அனைத்து புனிதர்களின் தேவாலயத்தில் கைக்குண்டு மீட்கப்பட்ட சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட ஓய்வுபெற்ற வைத்திய நிபுணரை பிணையில் விடுவிக்குமாறு கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி மஞ்சுள திலகரத்ன, நேற்று (21) கட்டளையிட்டார்.

தொடர்ச்சி P2



## இந்தியா கொடுத்த டீசல் இறக்கப்பட்டது

### எரிபொருள் வரிசை குறையும் என அறிவிப்பு

இந்தியக் கடன் உதவியின் கீழ் இலங்கைக்கு வழங்கப்பட்ட டீசல் தொகுதி நேற்று முன்தினம் (20) கொழும்பு துறைமுகத்தில் பெறப்பட்டு, அதை இறக்கும் பணி நேற்று (21) இடம்பெற்றதாக இலங்கை பெற்றோலிய சேமிப்பு முனையத்தின் தலைவர் எம்.ஆர். டபிள்யூ சொய்சா தெரிவித்தார்.

தொடர்ச்சி P2




விலை அதிகரிப்பு குறித்து

## லிட்ரோ இதுவரை தீர்மானிக்கவில்லை

எரிவாயு விலையை அதிகரிப்பது தொடர்பில் லிட்ரோ காஸ் லங்கா லிமிடெட் நிறுவனம் இதுவரை எந்தத் தீர்மானமும் எடுக்கவில்லை என நிறுவனத்தின் தலைவர் தெஷார ஜயசிங்க தெரிவித்தார். நாட்டின் பல பாகங்களிலும் சில விநியோகஸ்தர்கள், ஞாயிற்றுக்கிழமை (20) இரவு முதல் லிட்ரோ எரிவாயு சிலிண்டர்களின் விலைகளை தாறுமாறாக உயர்த்தியதாக கிடைக்கப்பெற்ற தகவல்களுக்கு பதிலளித்த போதே மேற்குறிப்பிட்ட விடயத்தை அவர் தெரிவித்தார்.

தமது நிறுவனத்தால் விலை அதிகரிக்கப்படவில்லை என்றும் எவரேனும் அதிக கட்டணம் வசூலித்தால் அது சட்ட விரோதமானது என்றார். லாஃப்ஸ் நிறுவனம் தமது எரிவாயு விலைகளை அதிகரித்த பின்னர், சில விநியோகஸ்தர்கள் 12.5 கிலோ கிராம் நிறையுள்ள லிட்ரோ எரிவாயு சிலிண்டரை 4,200 ரூபாய்க்கு விற்பனை செய்வதாக தகவல்கள் வெளியாகியிருந்தன.

## இராஜாங்க அமைச்சர் மீது காஸ் சிலிண்டர் தாக்குதல்

இராஜாங்க அமைச்சர், காஸ் சிலிண்டர் விநியோகிக்கும் கடையொன்றை கடந்து சென்று கொண்டிருந்த போது, அங்கு வரிசையில் நின்று கொண்டிருந்தவர்களில் ஒருவர், காஸ் சிலிண்டரால், வாகனத்தின் மீது தாக்குதல் நடத்தியுள்ளார்.

கம்பனித் தோட்டங்களைச் சீர்திருத்துதல், தேயிலை மற்றும் இறப்பர் தோட்டங்கள் சார்ந்த

தொடர்ச்சி P2



## சந்திப்பு...

அமெரிக்க தூதுவர் ஜூலி ஜியூன் சங்குக்கும், ஐக்கிய தேசிய கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில், கொழும்பில் நேற்று (21) முக்கிய சந்திப்பொன்று இடம்பெற்றது.

# ஒருகொடவத்தையில் கடும் வாக்குவாதம்

## பெண்களை தள்ளிவிட்ட பொலிஸார்; சிறார்களும் வீதியில்



ஒருகொடவத்தையில், காஸ் மற்றும் மண்ணெண்ணெய் இரண்டுக்கும் நீண்ட வரிசை நிலவியது. சிறுவர்கள், பெரியவர்கள், வயோதிபர்கள் என, அனைவரும் முண்டியடித்துக் கொண்டிருந்தனர்.

நீண்ட நேரமாகியும், எரிபொருள்கள் விநியோகிக்கப்படவில்லை. இதனால், பேஸ்லைன் வீதியை மறித்து, எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். பஸ்களை விடுவதற்கு மறுத்துவிட்டனர்.

இந்த எதிர்ப்பு நடவடிக்கை காரணமாக, அவ்விடத்தில் மட்டுமன்றி, அண்டிய பகுதிகளிலும் கடுமையான வாகன நெரிசல் ஏற்பட்டது.

இதற்கிடையே காஸ் சிலிண்டர்களை ஏற்றிக்கொண்டு வந்த லொறியைக் கண்டவர்கள் கைத்தட்டி வரவேற்றனர். எனினும், வீதியை மறித்தே இருந்தனர். போக்குவரத்தை சீர்செய்து கொண்டிருந்த பொலிஸார் கடும் முயற்சிகளை மேற்கொண்டும் முடியவில்லை.

தொடர்ச்சி P2

## ஜனாதிபதி இராஜினாமா?

### செய்தியை மறுத்தது ஊடகப் பிரிவு

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, ஜனாதிபதி பதவியிலிருந்து இராஜினாமா செய்வதற்கு தற்போது ஆலோசித்து வருகின்றனர் என்று, சமூக வலைத்தளங்களில் வெளியான செய்தியை, ஜனாதிபதி ஊடகப் பிரிவு மறுத்துள்ளது.

தொடர்ச்சி P2

## சீனாவிடம் 2.5 பில். டொலர் கடன் கோருகிறது இலங்கை

1 பில்லியன் ரூபாய் கடனுக்கு மேலதிகமாக, சீனாவிடம் இருந்து 1.5 பில்லியன் அமெரிக்க டொலரை இலங்கை அரசாங்கம் கடன் உதவியாகக் கோரியுள்ளதாக இலங்கைக்கான சீன தூரகம், நேற்று (21) தெரிவித்தது.

கொழும்பில் நேற்று (21) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இலங்கைக்கான சீனத் தூதுவர் கி சென்ஹொங் மேற்குறிப்பிட்ட விடயத்தைத் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



## மின்கட்டணம் 500% அதிகரிக்கும் அபாயம்



இலங்கை மின்சார சபையால் முன்வைக்கப்பட்டுள்ள யோசனையின் பிரகாரம், மின்சார கட்டணம் 500 சதவீதத்தால், அதிகரிக்க வாய்ப்பு உள்ளதாக இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

ஆனமடுவ பிரதேசத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர்,

தொடர்ச்சி P2

## கோட்டாவின் அழைப்பை நிராகரித்தார் ஜீவன்



இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும் இராஜாங்க அமைச்சருமான ஜீவன் தொண்டமான் அதிரடி தீர்மானமொன்றை எடுத்துள்ளார்.

அதாவது, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால், நாளை (23) நடத்தவிருக்கும் சர்வகட்சி மாநாட்டில் பங்கேற்கப் போவதில்லை என்று காங்கிரஸ் தீர்மானித்து விட்டதாக அறிவித்துள்ளார்.

## த.மு.கூட்டணியும் பங்கேற்காது



பொருளாதார துறையில் மட்டுமல்லாது, பொருளாதார வீழ்ச்சியின் தொடர்ச்சியாக நம் நாடு அரசியல், சமூக, கலாசார துறைகள் உள்ளிட்ட சகல துறைகளிலும் அதல பாதாளத்தில் விழுந்துள்ள பின்னணியில், சர்வகட்சி மாநாட்டில் கலந்து கொள்ளுமாறு விடுக்கப்பட்ட அழைப்பை கவனமாக பரிசீலித்து, இம்மாநாட்டில் கலந்துக்கொள்வதில்லை என தமிழ் முற்போக்கு கூட்டணி முடிவு செய்துள்ளதாக கூட்டணி தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2



சர்வகட்சி மாநாடு

## அரசாங்கத்தை பலப்படுத்த அல்ல

அரசாங்கத்துக்கு விசேட உதவிகளை வழங்குவதற்காக சர்வகட்சி மாநாட்டுக்கான அழைப்பு விடுக்கப்படவில்லை என்று தெரிவித்த முன்னாள் ஜனாதிபதியும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் தலைவருமான மைத்திரிபால சிறிசேன, அனைத்து தரப்பினரையும் இந்த மாநாட்டில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொண்டார்.

தொடர்ச்சி P2

## சர்வகட்சி மாநாட்டில் எதிர்க்கட்சி பங்கேற்காது



ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில், நாளை (23) இடம்பெறவுள்ள சர்வகட்சி மாநாட்டில் கலந்துகொள்ளப் போவதில்லை என, நாட்டின் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி தீர்மானித்துள்ளது.

அக்கட்சியின் தேசிய அமைப்பாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான திஸ்ஸ அத்தநாயக்க, நேற்று (21) கொழும்பில்

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# காவு கொள்ளும்...

கடவத்தையில் எரிபொருள் வரிசையில் நின்று கொண்டிருந்த போது மயங்கி விழுந்த முச்சக்கர வண்டி சாரதியான 70 வயதுடைய வயோதிபர், ராகம போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் ஞாயிற்றுக்கிழமை (20) உயிரிழந்திருந்தார்.

அத்துடன், கண்டி வத்தேகம□ உடதலவின்ன பகுதியை சேர்ந்த 71 வயதானவர், மண்ணெண்ணெய் வாங்குவதற்காக வரிசையில் காத்திருந்த போது, மயங்கி விழுந்து சனிக்கிழமை (19) உயிரிழந்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## இராஜாங்க அமைச்சர் மீது காஸ் சிலிண்டர் தாக்குதல்

பயிர்ச்செய்கை, தேயிலைத் தொழிற்சாலைகளை நவீனமயப்படுத்துதல் மற்றும் தேயிலை மற்றும் இறப்பர் ஏற்றுமதி மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத், பயணம் செய்துகொண்டிருந்த வாகனத்தின் மீதே, காஸ் சிலிண்டரினால் இவ்வாறு நேற்று (21) பிற்பகல் தாக்குதல் நடத்தியுள்ளார்.

இந்த சம்பவம் கேகாலை, ரன்வல சந்தியிலேயே இடம்பெற்றுள்ளது. இதனால், பெரும் பதற்றம் ஏற்பட்டது. எனினும், வாகனத்துக்கு எந்தவிதமான சேதங்களும் ஏற்படவில்லை என தகவல்கள் தெரிவிக்கின்றன.

காஸ் சிலிண்டரினால் தாக்குதல் நடத்தியவர், அங்கிருந்து தப்பியோடிவிட்டார் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## ஒருகொடவத்தையில் கடும் வாக்குவாதம்

இதனால், எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களும் பொலிஸாரும் தள்ளிக்கொண்டனர். அவ்விடத்தில் இருந்த பெண்களையும் பொலிஸார் கீழே தள்ளிவிட்டதை அவதானிக்க முடிந்தது. இதனால், பதற்றம் அதிகரித்தது. எனினும், காஸ் மற்றும் மண்ணெண்ணெய் விநியோகம் ஆரம்பிக்கப்பட்டமையால், அங்கு படையெடுத்துவிட்டனர். அதன்பின்னரே, நிலைமை வழமைக்குத் திரும்பியது.

## அரசாங்கத்தை பலப்படுத்த அல்ல

கொழும்பில் நேற்று (21) ஊடகங்களிடம் கருத்து வெளியிட்ட போதே மேற்குறிப்பிட்ட விடயத்தை அவர் தெரிவித்தார்.

இந்த மாநாட்டின் மூலம் மக்கள் எதிர்நோக்கும் நெருக்கடிகளுக்கு தீர்வு காண்பதையே நோக்கமாகக் கொண்டுள்ளதாகவும், அரசாங்கத்தை பலப்படுத்துவது நோக்கம் அல்ல என்றும் குறிப்பிட்டார்.

தற்போது நிலவும் நெருக்கடியான சூழ்நிலையில் இருந்து நாட்டை மீட்டெடுக்கும் பொறுப்பு அனைத்து அரசியல் தலைவர்களுக்கும் உள்ளது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

சில அரசியல் தலைவர்கள் மாநாட்டில் பங்கேற்பதாக கூறியுள்ள நிலையில், சிலர் தங்களது கொள்கைகளின் அடிப்படையில் அழைப்பை நிராகரித்துள்ளதாக குறிப்பிட்டார்.

தமது கருத்துக்களை வெளியிடுவதற்கும் மக்களின் சுமைகளிலிருந்து விடுபடுவதற்கான வேலைத்திட்டத்தை வகுப்பதற்கும் இந்த மாநாட்டில் கலந்து கொள்ளுமாறு அனைத்து தரப்பினரையும் கேட்டுக்கொண்டார்.

## ஓய்வு பெற்ற வைத்தியருக்கு பிணை

பிணை மனுவை பரிசீலித்த கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி, 100,000 ரூபாய் ரொக்கப் பிணையிலும் தலா 2.5 மில்லியன் ரூபாய் பெறுமதியான இரண்டு சரீரப் பிணைகளிலும் விடுவிக்குமாறு உத்தரவிட்டதுடன், அவருக்கு வெளிநாட்டு பயணத்தடையும் விதித்து உத்தரவிட்டார்.

பொரளையில் உள்ள அனைத்து புனிதர்களின் தேவாலயத்தில் ஜனவரி 11 ஆம் திகதி கைக்குண்டு கண்டுபிடிக்கப்பட்ட பின்னர் சிசிடிவி காட்சிகளின் அடிப்படையில் தேவாலயத்தில் பணிபுரிந்த ஒருவர் உட்பட மூன்று நபர்களை கைது செய்யப்பட்டனர். விசாரணைகளைத் தொடர்ந்து, தேவாலயத்துக்கு கைக்குண்டைக் கொண்டு வந்ததற்கு வேறொருவர் காரணம் என்பதும், குறித்த நபரை அடையாளம் கண்டு பொலிஸார் கைது செய்திருப்பதும் தெரியவந்தது. விசாரணையின் போது சந்தேகநபர் தனக்கு உதவிய மற்றுமொரு நபர் தொடர்பிலான தகவல்களை வெளிப்படுத்தினார்.

கைக்குண்டு விவகாரம் தொடர்பில் எம்பிலிப்பிட்டிய, பனாமுர பகுதியில் வைத்து கைது செய்யப்பட்ட சந்தேகநபரிடம் மேற்கொள்ளப்பட்ட நீண்ட விசாரணைகளின் பின்னர் ஜனவரி 18ஆம் திகதி இரவு வைத்தியரான டொக்டர் ஷெர்லி ஹேரத் (வயது 75) செய்யப்பட்டிருந்தார்.

பின்னர் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் வைத்தியரின் பெரிய வீட்டில் இருந்து நான்கு கைத்துப்பாக்கிகள், ஒரு ரிவோல்வர், இரண்டு வாள்கள், ஒரு ரம்போ கத்தி மற்றும் அடையாளம் தெரியாத துப்பாக்கியொன்று உள்ளிட்ட ஏராளமான ஆயுதங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக கொழும்பு தெற்கு குற்றப் புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## ஜனாதிபதி இராஜினாமா?

“கடுமையான நெருக்கடியின் போது, தப்பிச் செல்பவர்கள் அல்லர் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ” என ஜனாதிபதியின் ஊடகப் பேச்சாளர் கிங்சிலி ரத்னாயக்க தெரிவித்தார்.

“நாடு முகங்கொடுத்துக்கொண்டிருக்கும் பல்வேறான பிரச்சினைகளுக்கு தீர்வை தேடிடுவது தொடர்பில் ஜனாதிபதி ஆகக் கூடுதலான கவனத்தை செலுத்திவருகின்றார்” என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

நாட்டை மேலும் சீர்குலைக்கும் வகையில் சில குழுக்களால் வதந்திகள் பரப்பப்பட்டு வருவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இந்நிலையில், ஆளும் கட்சி உறுப்பினர்களை, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, இன்று (22) சந்திக்கவுள்ளார். அதில், நாட்டின் தற்போதைய பொருளாதார நெருக்கடி நிலைமை, முன்னெடுக்கவேண்டிய செயற்பாடுகள் தொடர்பில் இந்தக் கூட்டத்தில் விரிவாக கலந்துரையாடவுள்ளார்.

## இந்தியா கொடுத்த டீசல் இறக்கப்பட்டது

35,000 மெற்றிக் தொன் டீசலுடன் கப்பல் ஒன்று கொழும்பு துறைமுகத்தை வந்ததடைந்தாகவும் கொலன்னாவ சுத்திகரிப்பு நிலையத்தில் டீசலை இறக்குவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டதகவும் அவர் குறிப்பிட்டார். பெறப்பட்ட டீசல் உடனடியாக ரயில்வே தாங்கி வசதியின் மூலமாக உடனடியாக விநியோகிக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

இந்த விநியோகத்தின் மூலம் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் நிலவும் டீசல் வரிசைகள் முடிவடையும் என்றும் மேலும் 20,000 மெற்றிக் தொன் டீசல் தொகுதி அடுத்த இரண்டு நாட்களுக்குள் நாட்டை வந்து சேரும் என்று அவர் குறிப்பிட்டார்.

தங்களிடம் போதியளவான பெற்றோல் சேமிப்பு முனையத்தில் உள்ளதாகவும் கொழும்பு மற்றும் புறநகர் பகுதிகளுக்கு தேவையான அளவு விநியோகிக்கப்படும் என்று அவர் மேலும் கூறினார்.

## மின்கட்டணம் 500% அதிகரிக்கும் அபாயம்

மின்சார கட்டணத்தை அதிகரிப்பது தொடர்பில் இலங்கை மின்சார சபை பரிசீலித்து வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன என்றார்.

“பொதுமக்கள் தங்கள் வீடுகளில் உள்ள பல்வேறான மின்விளக்குகள் மற்றும் மின்விசிறிகளை உட்கார்ந்து பார்க்க வேண்டும், அவற்றைப் பயன்படுத்த வேண்டாம். அத்தகைய சூழ்நிலையில் நாடு வீழ்ந்துள்ளது,” என்றார்.

“இரண்டு வருடங்களாக நாட்டைப் பீடித்துள்ள கொரோனா வைரஸ் தொற்றின் தாக்கங்கள் மற்றும் உக்ரேனுக்கும் ரஷ்யாவுக்கும் இடையில் நிலவும் மோதல்கள் காரணமாக இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது” என்றும் இராஜாங்க அமைச்சர் கூறினார்.

எவ்வாறாயினும், மின்சாரக் கட்டணங்கள் விரைவில் அதிகரிக்கப்படாது என ஆணைக்குழு முன்னதாக தெரிவித்திருந்தது.

இது தொடர்பாக இலங்கை மின்சார சபையிடமிருந்து தேவையான தரவுகளை பெற்று மதிப்பாய்வு செய்த பின்னரே விலை உயர்வு குறித்து முடிவு செய்யப்படும் என்றும் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. மறுஆய்வு செயல்முறைக்கு நீண்ட காலம் தேவைப்படும் என்று ஆணைக்குழு மேலும் கூறியது.

## சீனாவிடம் 2.5 பில். டொலர் கடன் கோருகிறது இலங்கை

அங்கு மேலும் தெரிவித்த அவர், இந்த கடனுதவி கோரிக்கை தொடர்பாக சீனா தற்போது பரிசீலித்து வருவதாகவும் கடன் மற்றும் வாங்குபவர்களின் கடன் எவ்வாறு பயன்படுத்தப்படும் என்பது குறித்து இரு நாடுகளும் கலந்துரையாடப்பட வேண்டும் என்று அவர் கூறினார்.

தற்போதைய பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வதற்கு 2021ஆம் ஆண்டில் வழங்கப்பட்டுள்ள 1.5 பில்லியன் டொலர் நாணய பரிமாற்றத்துக்கு மேலதிகமாக இந்த கடனுதவி கோரப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இலங்கைக்கு அதிகளவில் வெளிநாட்டு கடன் உதவிகளை வழங்கியுள்ள நாடாக சீனா காணப்படுகிறது என்றும் இலங்கையின் அபிவிருத்திக்காக சீனாவினால் சுமார் 16 பில்லியன் அமெரிக்க டொலர் வழங்கப்பட்டுள்ளது என்றும் குறிப்பிட்டார்.

இலங்கையும் சீனாவும் மிக நல்ல நண்பர்கள். நெருக்கடியான காலங்களில் சீனா தமது நண்பர்களை கைவிடாது என்றார்.

உலக தரவரிசையில் இலங்கையின் கடன் தரப்படுத்தல் குறைந்தாலும் இலங்கை மீதான சீனாவின் நம்பிக்கை குறையவில்லை எனவும் 2020 ஆண்டு முதல் சீனா 2.8 பில்லியன் டொலர் நிதியுதவியை வழங்கியுள்ளது எனவும் சுட்டிக்காட்டினார்.

ஹம்பாந்தோட்டை துறைமுகம் மற்றும் கொழும்பு துறைமுக நகரத்திட்டம் ஆகியவற்றில் முதலீடுகளை அதிகரிக்க அந்நாட்டின் தனியார் துறையை சீனா ஊக்குவிக்கிறது எனவும் குறிப்பிட்டார். ஹம்பாந்தோட்டையிலுள்ள கைத்தொழில் வலயத்தில் தொழில் தொடங்கும் ஒப்பந்தத்தில் இதுவரை 43 நிறுவனங்கள் கையெழுத்திட்டுள்ளன எனவும் சீன நிறுவனங்கள் இதுவரை துறைமுக நகரத்தில் 1.05 பில்லியன் டொலரை முதலீடு செய்துள்ளன என்றும் அவர் தெரிவித்தார்.

இரு நாடுகளுக்கும் இடையில் கைச்சாத்திடப்படவுள்ள சுதந்திர வர்த்தக உடன்படிக்கையை சாதகமாகப் பயன்படுத்த சீனா விரும்பவில்லை என்றும் தெரிவித்தார்.

70 ஆண்டுகளுக்கு முன்பு சீனா மிகக் குறைந்த புள்ளியில் இருந்தபோது இலங்கை சீனாவுக்கு உதவியதால், இலங்கையின் சூழ்நிலையை சீனா பயன்படுத்திக் கொள்ளாது என்றும் குறிப்பிட்டார்.

20,000 வடக்கு மாகாண பாடசாலை மாணவர்கள் 20,000 பேருக்கு உதவுவதற்காக 5 இலட்சம் டொலர்களை வழங்க உள்ளது சீனாவின் வறுமை ஒழிப்பு அமைப்பு வழங்கவுள்ளதாகத் தெரிவித்த அவர், 6,000 இலங்கை மாணவர்களுக்கு சீனப் பல்கலைக்கழகங்களில் மீண்டும் பட்டப்படிப்பைத் தொடங்குவதற்கு முன்னுரிமை வழங்க சீனா தீர்மானித்துள்ளது எனவும் சிலர் ஏற்கெனவே கல்வி நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளனர் என்றார்.

சீன அபிவிருத்தி வங்கிக்கு 53.596 மில்லியன் டொலர்கள், தேசிய நீர்வழங்கல் சபைக்கு 17 மில்லியன் டொலர்கள் மற்றும் 386.19 மில்லியன் யுவான்களை சீனா எக்சிம் வங்கிக்கும் மார்ச் 18ஆம் திகதி முதல் 21ஆம் திகதிக்கு இடையில் இலங்கை செலுத்த திட்டமிடப்பட்டிருந்தது. ஆலோசிக்கப்பட்டு வருவதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## சர்வகட்சி மாநாட்டில் எதிர்க்கட்சி பங்கேற்காது

இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இவ்விடயத்தை உறுதிப்படுத்தியுள்ளார்.

மாநாட்டைப் புறக்கணிக்க அமைச்சர் வாசுதேவ நாணயக்கார, முன்னாள் அமைச்சர்களான விமல் வீரவன்ச மற்றும் உதய கம்மன்பில ஆகியோர் தீர்மானித்துள்ளனர் என தெரிவிக்கப்பட்டிருந்த நிலையில், மாநாட்டில் பங்கேற்க போவதில்லை என மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்கவும் நேற்றுமுன்தினம் (20) தெரிவித்திருந்தார்.

பொருளாதார பிரச்சினைக்கு தீர்வுகாணாமல் அரசியல் பிரச்சினைக்கு தீர்வுகாண்பதற்கே இந்த மாநாடு கூட்டப்படுவதாகக் குற்றஞ்சுமத்திய அவர், மாநாட்டில் பங்கேற்கப்போவதில்லை என்று குறிப்பிட்டிருந்தார்.

அத்துடன், நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலை குறித்து ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவிலோ, ஆளும் கட்சி உறுப்பினர்களுக்கு இடையிலோ, அமைச்சரவையிலோ விவாதிக்காமல் சர்வகட்சி மாநாட்டை கூட்டுவது பொய் என்றும் பங்காளிக் கட்சியின் தலைவர் ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

நாடு முழுவதும் அரசாங்கத்தின் மீது பழி சுமத்தும் இந்த தருணத்தில், அந்த கண்டனத்தை பகிர்ந்து கொள்வதற்காக சர்வகட்சி மாநாடு கூட்டப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

இதேவேளை, சர்வகட்சி மாநாட்டில் கலந்துகொள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தீர்மானித்துள்ளதாகவும் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் இந்த தீர்மானத்தை எடுத்துள்ளதாக கட்சியின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

### மல்வத்து, அஸ்கிரியா மஹாநாயக்கர்கள்

## 13 யோசனைகள் அடங்கிய கடிதத்தை ஜனாதிபதிக்கு அனுப்பினர்

பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு நிவாரணம் வழங்குவது தொடர்பான 13 யோசனைகள் அடங்கிய கடிதம் ஒன்றை மல்வத்து பீட□மஹாநாயக்க திப்பட்டுவாவே சுமங்கல தேரர் மற்றும் அஸ்கிரிய பீட□மஹாநாயக்க வரகாகொட ஞானரதன தேரர் ஆகியோர் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு அனுப்பி வைத்துள்ளனர்.

ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கு தேசிய கொள்கையொன்றை வகுக்க வேண்டியதன் அவசியத்தை மஹாநாயக்க தேரர்கள் கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அந்நியச் செலாவணி நெருக்கடியைத் தணிக்க அடையாளம் காணப்பட்ட முன்னுரிமைகளின் பட்டியலின்படி, அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைப்படுத்துதல், வாழ்க்கைச் செலவைக் குறைத்தல் மற்றும் உள்நாட்டுப் பொருளாதார மாதிரியை உருவாக்குதலும் பரிந்துரைகளில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

அத்தியாவசிய உணவுப் பொருட்களின் உற்பத்திக்கு, விவசாயத்திற்கு மற்றும் விவசாய மக்களுக்கு நிவாரணம் வழங்குதல், பொருளாதார நெருக்கடிக் காலத்தில் முறையற்ற நிதியீட்டல்களுக்காக அத்தியாவசியமான பொருட்களில் செயற்கையாகப் பற்றாக்குறையை உருவாக்கும் மோசடி வியாபாரிகளுக்கு எதிராகச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதன் முக்கியத்துவத்தையும் மஹாநாயக்க தேரர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

முதலீட்டை ஊக்குவிக்கவும், வெளிப்படையான பொருளாதாரத் திட்டத்தின் மூலம் வெளிநாட்டுப் பணப் பரிமாற்றத்தை அதிகரிக்கவும், ஏற்றுமதிப் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப வேண்டியதன் அவசியத்தையும் கடிதத்தில் முன்மொழியப்பட்டுள்ளது.

நாட்டில் புதிய முதலீடுகளை ஊக்குவித்தல், அரசக் கடனை மறுசீரமைத்தல், குறைந்த வருமானம் ஈட்டுவோருக்கு நிவாரணம் வழங்குதல், வீண்விரயம், ஊழல் மற்றும் வள துஷ்பிரயோகம் ஆகியவற்றைத் தடுக்க நிலையான திட்டத்தை உருவாக்குவதன் முக்கியத்துவத்தையும் தேரர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

நாட்டின் பாதுகாப்பு மற்றும் இறையாண்மைக்காக நடைமுறைப்படுத்திய தூரநோக்குடைய வேலைத்திட்டங்கள் தொடர்பில் முழு நாட்டு மக்களினதும் பாராட்டு மற்றும் மகிழ்ச்சி ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு கிடைக்கும் என்று மஹாநாயக்க தேரர்கள் இக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளனர்.

கட்சி பேதமின்றி நாட்டைப் பொருளாதார ரீதியாக கட்டியெழுப்புவதற்கு அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களின் பூரண பங்களிப்பும் அர்ப்பணிப்பும் அவசியம் என்று தேரர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

## த.மு. கூட்டணியும் பங்கேற்காது

அரசாங்கத்தின் தோல்வியை எதிரணியின் தலைகளில் சுமத்துவதற்கான முயற்சியாகவும், அரசாங்கத்தின் பங்காளி கட்சியான ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சியை திருப்தி படுத்த அரசாங்கம் செய்யும் முயற்சியாகும் என்றும் தெரிவித்துள்ளார்.

நேற்று உலக மனநலிவு நோய் தினம்:

# 'நாங்கள் இணைக்கிறோம்; அதனால் எங்களால் முடியும்'

சி. அருள்நேசன்



உலக மனநலிவு நோய் தினம் (WDSD) 2022ஆம் ஆண்டு, 21ஆம் திகதி நேற்று அனுஸ்டிக்கப்பட்டது. 2011 முதல் ஒவ்வோர் ஆண்டும் ஒரு குறிப்பிட்ட கருப்பொருளுடன் இத்தினம் அனுஸ்டிக்கப்பட்டுவருகின்றது. இந்த ஆண்டு கருப்பொருள் ஐக்கிய நாடுகள் சபையால், 'நாங்கள் இணைக்கிறோம்; அதனால் எங்களால் முடியும்' என்பதாகப்படுத்தப்பட்டிருந்தது. ஒருவருக்கொருவர் இணைவதற்கு, மனிதர்களைத் தவிர வேறு எதுவும் முக்கியமில்லை என்பதை இது நிரூபிக்கிறது. கொவிட் -19 பெருந்தொற்றுக் காலப்பகுதியில், மனநலிவு நோயால் பாதிக்கப்பட்டவர்கள் தனியாக இருக்கக்கூடாது என்பதையும் இது வலியுறுத்துகின்றது.

## உலக மனநலிவு நோய் தினத்தின் நிறங்கள்

உலக மனநலிவு நோய் தின வண்ண ரிப்பன்கள், நீலம் மற்றும் மஞ்சள் நிறங்கள் டவுன் சிண்ட்ரோம் நாள் விழிப்புணர்வைக் குறிக்கின்றன. ரிஸ்ட் பேண்டுகள், ரிப்பன்கள் அல்லது நீலம் அல்லது மஞ்சள் நிறங்களின் லேபல் பின்கள் உங்கள் ஆதரவைக் காட்ட அல்லது உலக மனநலிவு நோய் தினத்தில் நிதி திரட்ட பயன்படுத்தப்படலாம்.

## மனநலிவு நோய் என்றால் என்ன?

மனநலிவு நோய் அடிப்படையில், ஒரு மரபணு மற்றும் இறுதியில் ஒரு உடல் கோளாறு ஆகும், இது 46 குரோமோசோம்கள் (23 ஜோடிகள்) கொண்ட மனித உடலில் கூடுதல் 21 வது குரோமோசோமால் ஏற்படுகிறது. மனநலிவு நோய் உள்ளவர்கள் வளர்ச்சி குன்றியிருப்பதைக் காணலாம். அதாவது தசைகள் குறைதல், குட்டையான கழுத்து, அதிக தோல், தட்டையான முகம், மூக்கு, சிறிய காதுகள், கண்கள், வாய் போன்றவை. 21ஆவது குரோமோசோம், 200-300 மரபணுக்கள் உடலைப் பராமரிக்கும் பொறுப்பாகும். புரதம், டவுன் சிண்ட்ரோம் உள்ளிட்ட தசைக் கோளாறுகளை ஏற்படுத்தும்.

உயிரணுப் பிரிவு, விந்து, முட்டை உற்பத்தியின் போது, 21ஆவது குரோமோசோமில் ஒரு போதனை குறைபாடு ஏற்படுகிறது. இது மனநலிவு நோய் நிகழ்தகவை ஏற்படுத்துகிறது. எவ்வாறாயினும், 20 வயதுக்குட்பட்ட அல்லது 35 வயதுக்கு மேற்பட்ட பெற்றோரின் குழந்தைகளில் மனநலிவு நோய்வாய்ப்புகள் அதிகம் என்று புள்ளிவிவர பகுப்பாய்வு காட்டுகிறது.

உலக மனநலிவு நோய் தினத்தின் அடிப்படை நோக்கம், இந்த நோயைப் பற்றிய விழிப்புணர்வை மக்களிடையே காட்டுவதும், மனநலிவு நோய் உள்ள நம்பமுடியாத பண்புகளைக் கொண்டவர்களுடன் நிற்பதும் ஆகும். கர்ப்பிணித் தாயின் சரியான ஊட்டச்சத்து மற்றும் மனச்சோர்வில்லாத வாழ்க்கை முறை அவசியம் என்பதை இந்த நாள் விளக்குகிறது. இந்த நாளைக் கடைப்பிடிப்பதைத் தீர்மானிக்கும் மற்றொரு நோக்கம், திருமணத்திற்கான பொருத்தமான வயதை (25-34 க்கு இடையில்) நிர்ணயம் செய்வதாகும்.

இதனால் இந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளின் மூலம் இந்தக் கோளாறின் நிகழ்தகவு குறைக்கப்பட வேண்டும்.

## உலக மனநலிவு நோய் தினத்தின் வரலாறும் பின்னணியும்

மனநலிவு நோய் என்பது ஒரு வகையான கோளாறு. இது உலகெங்கிலும் உள்ள அனைத்து பகுதிகளிலும் எந்த முன் காரணமும் இல்லாமல் காணப்படுகிறது. ஒவ்வோர் ஆண்டும் 3,000 முதல் 5,000 குழந்தைகள் குரோமோசோமால் கோளாறுடன் பிறப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

2005 ஆம் ஆண்டில், ஐ.நாவின் பொதுச் சபை, ஐ.நாவின் நிலையான வளர்ச்சி இலக்கை நிறைவேற்றுவதில் யாரும் பின்தங்கியிருக்கக் கூடாது என்றும், மாற்றுத்திறனாளிகளும் ஐ.நாவின் நிகழ்ச்சி நிரல் 2030இன் இலக்குகளில் ஐ.நாவுக்கு உதவ முன்வர வேண்டும் என்றும் முடிவு செய்தது.

நமது பூகோளத்தின் மேம்பாடு மற்றும் நலனுக்காக ஐக்கிய நாடுகள் 17 நிலையான வளர்ச்சி இலக்குகளைக் கொண்டிருப்பதால், உலக டவுன் சிண்ட்ரோம் தினம் ஐ.நாவின் 10வது இலக்கான 'குறைக்கப்பட்ட சமத்துவமின்மை' என்ற பிரிவில் வருகிறது. இது இயலாமை, பாலினம் ஆகியவற்றின் அடிப்படையில் சமத்துவமின்மையின் அடிப்படையில் பாகுபாட்டைத் தவிர்க்க பரிந்துரைக்கிறது. தோற்றம், இனம், முதலியன இருப்பினும், நிலையான உலகத்துக்கான ஐ.நாவின் இந்த இலக்கில் ஊனம் ஒரு நோக்கமாகும்.

உலக மனநலிவு நோய் தினத்தன்று வினோதமான உடைகள் மற்றும் வெவ்வேறு நிறங்களின் பொருந்தாத காலுறைகள் போன்ற ஆர்ப்பாட்டமான ஆடைகளை அணிந்து, மனநலிவு நோய் உள்ளவர்களுடன் ஒற்றுமையை வெளிப்படுத்துவதை வலியுறுத்துகின்றது.

மனநலிவு நோய் குறியீடுகள், பதாகைகள், கண்களைக் கவரும் வண்ணங்களைக் கொண்ட விளக்கப்படங்கள் போன்ற பிற வெளிப்படையான பொருட்களையும் இத்தினத்தன்று காட்டலாம்.

உங்களைச் சுற்றியுள்ள யாருக்காவது மனநலிவு நோய் இருந்தால் பெருமையுடன் அறிவிக்க முன்வருவதுடன், மற்றவர்களை எதிர்பார்த்து உங்கள் நண்பரை அழைத்து, அவர்களுக்கு மனநலிவு நோய் உள்ள ஒரு நண்பர் இருப்பதாக அறிவிக்கவும்.

மனநலிவு நோய் நபர்களின் தனிப்பட்ட குணங்களை முன்னிலைப்படுத்துதல் மற்றும் அவர்களை பொதுவில் ஊக்குவித்தல்.

மனநலிவு நோய் என்பது குணப்படுத்த முடியாத ஒரு கோளாறாகும். ஆனால் ஊக்கம் இந்த நபர்களின் உடல் மற்றும் மன திறன்களை மேம்படுத்தும் அதே வேளையில், உந்துதல் மூலம் வலுவூட்டல் சிறந்த வழியாகும். அத்தகையவர்களின் திறன்களை மேம்படுத்த இந்த நாளை ஒரு கருவியாகப் பயன்படுத்த வேண்டும்.

## மனநலிவு நோய் பற்றிய முக்கிய உண்மைகள்

புதிதாகப் பிறந்த குழந்தையின் 21வது குரோமோசோமின் கூடுதல் நகல் காணப்படுவதால் மனநலிவு நோய் ஒரு மரபணு நிலை காரணமாக ஏற்படுகிறது. இந்தக் கோளாறுக்கான சரியான காரணம் இன்னும் அறியப்படவில்லை.

மனநலிவு நோய் உள்ளவர்களின் மொத்த ஆயுட்காலம் 1981 இல் 25 ஆண்டுகள்; ஆனால், இன்று அது சுமார் 60 ஆண்டுகளாக உயர்ந்துள்ளது. மனநலிவு நோய் உள்ள குழந்தைகள் மற்றும் பெரியவர்கள் சில பொதுவான அம்சங்களைக் கொண்டிருக்கலாம். ஆனால் இயற்கையாகவே, தனிநபர்கள் தங்கள் நெருங்கிய குடும்ப உறுப்பினர்களை ஒத்திருப்பார்கள்.

மனநலிவு நோய் உள்ள குழந்தைகளுக்கு சரியான கல்வியை வழங்குவது இப்போது பள்ளிகளின் பொறுப்பாகும். தாய்வழி வயது அதிகரிப்புடன் மனநலிவு நோய் உள்ள குழந்தை பிறக்கும் வாய்ப்புகள் அதிகரிக்கும். எனினும் 80 சதவீதமான குழந்தைகள் 35 வயதுக்குட்பட்ட பெண்களுக்கு பிறக்கின்றன.

மனநலிவு நோய் நபர்களைப் பற்றிய ஒரு சுவாரஸ்யமான விடயம் என்னவென்றால், அவர்கள் அடிக்கடி வேலை செய்ய முடியும்; சுதந்திரமாக வாழ மற்றும் பிற செயல்பாடுகளை அனுபவிக்க முடியும். ஆனால் அவர்களின் மன மற்றும் உடல் நடத்தை அடிப்படையில் சராசரியாக தனிநபருக்கு மாறுபடும்.

எனவே, உலகளாவிய ரீதியில் மனநலிவு நோயின் விழிப்புணர்வு நாளாக அனுஸ்டிக்கப்படும் தினத்தில், தொடர்ச்சியாக நோய் அறிகுறிகளைக் கொண்ட நபர்கள் மீது அக்கறை காட்டுவதன் மூலம், சமூகத்தில் இவ்வாறானவர்களின் எண்ணிக்கையைக் குறைத்து கொள்ள முடிவதுடன், எமது நாட்டில் இந்நோய் சார்ந்த முறையான விழிப்புணர்வு ஏற்படவும் வாய்ப்புண்டு.

எத்தனை நாளுக்கு 'ஆமாம் சேர்' போடுவது?

# மன்னிப்பு கேட்டார் இராஜாங்க அமைச்சர்



அத்தியாவசியப் பொருட்களுக்காக வரிசையில் நிற்பவர்களுக்கும், உர தடையால் பாதிக்கப்பட்ட விவசாயிகளிடமும் தான் பகிரங்கமாக மன்னிப்புக் கேட்பதாக இராஜாங்க அமைச்சர் ரொசான் ரணசிங்க தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர், நாட்டில் இன்று பல நெருக்கடிகள் ஏற்பட்டுள்ளன. இதில் மறைப்பதற்கு ஒன்றுமில்லை. நான் இராஜாங்க அமைச்சராக இருந்துகொண்டு ஜனாதிபதி, பிரதமர், நிதி அமைச்சர் ஆகியோர் சிறந்தவர்கள் என எத்தனை நாள்களுக்குக் கூறிக்கொண்டிருக்க முடியும்? எத்தனை நாள்களுக்கு 'ஆமாம் சேர், ஆமாம் சேர்' என்று கூறிக்கொண்டிருப்பது எனவும் கேள்வி எழுப்பினார்.

நுகர்வோர், அரச ஊழியர்கள், விவசாயிகள் என அனைவரும் கவலையில் இருக்கிறார்கள். பலவந்தமாக இதனைச் செய்யுங்கள் என எவருக்கும் உத்தரவிட முடியாது.

ஜனாதிபதிக்கு நாட்டு நிலைமைகள் தொடர்பில் சரியான தகவல்களை எவரும் கூறுவதில்லை. உரம் கிடைப்பதாகக் கூறுகிறார்கள். ஆனால் உண்மையில் அப்படி எதுவும் கிடைக்கவில்லை. நாட்டு நிலைமைகள் தொடர்பில் அமைச்சரவை அமைச்சர்கள் உரையாற்ற முடியாத நிலையே காணப்படுகிறது. அமைச்சர்கள் பேசும்போதே, 'வாயை மூடிக்கொண்டு இரு' என்கிறார்கள். ஜனாதிபதி, பிரதமரை சந்திக்கும் அமைச்சர்கள் நாட்டில் பிரச்சினை இல்லை எனவும், கிராமங்களில் பிரச்சினை இல்லை எல்லாம் சரியாக இருப்பதாகக் கூறி ஏமாற்றுகிறார்கள் என்றார்.

இதனாலேயே 2015ஆம் ஆண்டு அப்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வீட்டுக்கு செல்ல நேர்ந்தது. 'ஆமாம் சார்' என்று கூறி, ஜனாதிபதியை தவறாக வழிநடத்துகிறார்கள் எனவும் தெரிவித்தார்.

# 20 ரூபாய் மதிப்புள்ள 2 புதிய நாணயங்கள்



கொழும்பு பல்கலைக்கழக மருத்துவ பீடத்தினதும் இந்நாட்டின் முதலாவது சனத்தொகை மற்றும் வீட்டுக் கணக்கெடுப்பினதும் 150ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு, 20 ரூபாய் பெறுமதியுள்ள இரண்டு புதிய நினைவு நாணயங்கள் வெளியிடப்பட்டன.

கொழும்பு பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் திருமதி சந்திரிகா எல். விஜேரத்ன, தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிவரத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் பி.எம். பி.அநுர குமார ஆகியோர் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு, ஜனாதிபதி செயலகத்தில் வைத்து, நினைவு நாணயங்களை நேற்று (21) வழங்கி வைத்தனர்.

முஸ்லிம் மீடியா போரத்தின்

# செயற்குழு கூட்டம்



ஸ்ரீ லங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் நடப்பாண்டுக்கான (2022-2023) புதிய செயற்குழுவின் முதல் கூட்டம் கொழும்பில் ஞாயிற்றுக்கிழமை (20) நடைபெற்றது.

போரத்தின் புதிய தலைவி புர்கான் பீ இப்திகாரின் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், புதிய நிர்வாகக் குழு தெரிவு இடம்பெற்றது.

இத்தெரிவில், உப தலைவர்களாக எம்.ஏ.எம் நிலாம், கலைவாதி கலீல், உபசெயலாளர்களாக சாதிக் ஷிஹான், ஜாவித் முனவ்வர், உதவி பொருளாளராக ஜே.எம்.நாளிர், தேசிய அமைப்பாளராக மௌலவி எஸ்.எம்.எம். முஸ்தபா, ஊடக இணைப்பாளராக எம்.எஸ்.எம். ஸாகிர், சஞ்சிகை ஆசிரியர்களாக ஷாமிலா செரீப், ஷம்ஸ் பாஹிம், பயிற்சிப்பிரிவு பிரதானியாக சமீஹா சபீர், இணையத்தள ஆசிரியராக டீ.ஜீ. எம்.எஸ்.எம் ராபி ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

இச்செயற்குழு கூட்டத்தின்போது தலைவிக்கு உள்ள அதிகாரத்தின் பிரகாரம் தாஹா முஸம்மில், ஷம்ஸ் பாஹிம் ஆகியோர் செயற்குழுவில் இணைத்துக் கொள்ளப்பட்டதோடு, இவ்வருடத்துக்கான பல்வேறுபட்ட வேலைத்திட்டங்கள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டன.

இதேவேளை, பேராளர் மாநாட்டின் போது அதிகளவான உறுப்பினர்களின் வேண்டுகோளுக்கிணங்க முன்னாள் தலைவர் என்.எம் அமீன் செயற்குழுவில் இணைக்கப்பட்டார்.

# 2 பாலங்களுக்கு அடிக்கல் நாட்டப்பட்டது



கிராமிய பாலம் நிர்மாணத் திட்டத்தின் கீழ் பெந்தர ஆற்றின் குறுக்கே இத்தப்பனையையும் ஹொரவளையையும் இணைக்கும் புதிய பாலங்கள் அமைக்கப்படும். இரண்டு உத்தேச புதிய பாலங்களுக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தலைமையில் நேற்று (21) இடம்பெற்றது.

பலபிட்டிய பிரதேசத்தில் மாது ஆற்றின் குறுக்கே நிர்மாணிக்க உத்தேசிக்கப்பட்டுள்ள இரண்டு புதிய பாலங்களில் முதலாவது பாலத்தின் நீளம் 330.5 மீற்றரும் அகலம் 4.8 மீற்றரும் ஆகும். இரண்டாவது பாலத்தின் நீளம் 49.55 மீற்றரும் அகலம் 4.8 மீற்றரும் ஆகும். இந்த இரண்டு பாலங்களை நிர்மாணிக்க 975.9 மில்லியன் ரூபாய் செலவிடப்படும்.

நெடுஞ்சாலைகள் அமைச்சு மற்றும் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் நேரடி மேற்பார்வையின் கீழ், அரச நிர்மாண கூட்டுத்தாபனத்தின் கீழ் (SD&CC) கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பாலம் கட்டும் பணி 24 மாதங்களுக்குள் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது என அமைச்சின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

# பாரபட்சமின்றி நடவடிக்கை எடுப்பேன்

"சுற்றாடல் அமைச்சராக நான் பதவி வகிக்கும் வரையில், சுற்றாடலுக்குப் பாதிப்பை ஏற்படுத்துபவர்களுக்கு எதிராக பாரபட்சமின்றி நடவடிக்கை எடுப்பேன்" என அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர், 65 ஆயிரம் ஹெக்டேயர்களை வனப் பகுதிகளாக உள்வாங்கும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. புதிதாக இடங்களை உள்வாங்குவதைக் காட்டிலும் அரச நிறுவனங்கள் வசமிக்கும் பாரியளவிலான இடப் பரப்புகளை வனப் பகுதிகளாக உள்வாங்கவே எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார்.

சுற்றுச்சூழலுக்குப் பாதிப்பை ஏற்படுத்துபவர்கள் எவராக இருந்தாலும், அவர்களின் பதவி நிலைகளைப் பார்க்காது பாரபட்சமின்றி அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.



Platinum Sponsor · Gold Sponsors · Silver Sponsors · Principal Sponsor - Job Fair · Telecommunication Partner · Print Media Partner · Endorsed By · Strategic Partner · Organized By

முல்லைத்தீவில்

# போட்டிக்கு ஓடிய பஸ்கள்

## மயில் குறுக்கே பாய்ந்ததால் விபத்து; ஸ்தலத்தில் ஒருவர் பலி, 21 பேர் காயம்; பொதுமக்கள் குற்றச்சாட்டு;

செ.கீதாஞ்சன், சண்முகம் தவசீலன்

முல்லைத்தீவு, வட்டுவாகல் பகுதியில் தனியார் பஸ்ஸொன்று, நேற்று முன்தினம் (20) விபத்துக்குள்ளாகி குடைசாய்ந்ததில் ஸ்தலத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன், 21 பேர் காயமடைந்துள்ளனர்.

இந்த விபத்து தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

இ.போ.ச பஸ் ஒன்றும் தனியார் பஸ் ஒன்றும் போட்டி போட்டுக் கொண்டு ஓடியிருக்கின்றன. இதன்போது, வீதியின் குறுக்கே அழகிய மயில் ஒன்று பாய்ந்துள்ளது. இதனை அவதானித்த இ.போ.ச பஸ் வேகத்தை சடுதியாகக் குறைத்துள்ளது.

இதனால் பின்னால் ஓடிவந்த தனியார் பஸ், வேகத்தைக் கட்டுப்படுத்த முடியாமல் இ.போ.ச பஸ்ஸை விலக்கிச் செல்லமுற்பட்ட போது, வீதியின் குறுக்கே சென்ற மயிலையும் மோதித் தள்ளிவிட்டு, வீதியை விட்டு விலகி குடைசாய்ந்தது.

இதன்போது பஸ்ஸில் பயணித்த கிளிநொச்சியைச் சேர்ந்த யூட் நிக்சன் (33 வயது) என்பவர் உயிரிழந்துள்ளார்.

அத்துடன், 21 பேர் காயமடைந்த நிலையில் பொதுமக்களால் மீட்கப்பட்டு, முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். இவர்களில் நால்வர் அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்ட நிலையில், 61 வயதுடைய நபரொருவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

காயமடைந்தவர்களில் 14 பேர் வைத்தியசாலையில் நேற்றைய தினமும் (21) சிகிச்சை பெற்று வருகின்றார்கள்; ஏனையவர்கள் வீடு திரும்பியுள்ளார்கள்.







அரச மற்றும் தனியார் பஸ்கள் போட்டிக்கு ஓடியமையே இந்த விபத்துக்குப் பிரதான காரணம் என பொதுமக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர். அரச பஸ்களுடன் முல்லைத்தீவு மாவட்ட தனியார் பஸ்கள் ஏட்டிக்கு போட்டியாக ஓடி வருவதாகவும் இவ்வாறான விபத்துகள் தொடர்ந்தும் இடம்பெற்று வருவதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த விபத்து தொடர்பில் முல்லைத்தீவு பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

யாழ். மூளாயில் விபத்து;

## காரைநகர் வாசி உயிரிழப்பு

எம். றொசாந்த், செந்துரன் பிரதீபன்

யாழ்ப்பாணம், மூளாய் பகுதியில் நேற்று முன்தினம் (20) இரவு இடம்பெற்ற விபத்தில் சம்பவ இடத்திலேயே ஒருவர் உயிரிழந்துள்ளார். மற்றொருவர் காயமடைந்த நிலையில், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

காரைநகர், கருங்காலியைச் சேர்ந்த சங்கரப்பிள்ளை நித்தியானந்தராசா (வயது-49) என்பவரே விபத்தில் உயிரிழந்துள்ளார்.

யாழ். பல்கலைக்கழக மாணவனான மூளாயைச் சேர்ந்த ஆனந்தகுமார் கஜீபன் என்ற இளைஞரே காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மூளாய் - மாவடி வீதியில், காளி கோவிலுக்கு சமீபமாக இருவரும் பயணித்த மோட்டார் சைக்கிள்கள் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளதாக ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

விபத்து தொடர்பில் வட்டுக்கோட்டை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.



## கண்ணிவெடிகள் மீட்பு



விடுதலைப் புலிகளால் பயன்படுத்தப்பட்டதாக சந்தேகிக்கப்படும் கண்ணிவெடிகளை, பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் (STF) மீட்டுள்ளனர்.

பூவரசங்குளம் பொலிஸ் விசேட அதிரடிப்படை அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில், வேலங்குளம், காப்புக்காடு பகுதியில் உள்ள செங்கல்படை பகுதியில் நேற்று முன்தினம் (20) தேடுதல் மேற்கொள்ளப்பட்டது.

இதன்போதே, இறுதி யுத்தத்தின் போது விடுதலைப் புலிகளால் மரமொன்றின் கீழ் மறைத்து வைக்கப்பட்டிருந்த 04 கண்ணிவெடிகளை கண்டுபிடித்துள்ளனர்.

கால்வாயில்

## தவறி விழுந்த குழந்தை மரணம்

செ. கீதாஞ்சன்

புதுக்குடியிருப்பில் மலசலகூடத்துக்காக வெட்டப்பட்ட தண்ணீர் கால்வாயில் தவறி விழுந்த குழந்தை உயிரிழந்துள்ள சம்பவம், அப்பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

புதுக்குடியிருப்பு, கைவேலிப் பகுதியைச் சேர்ந்த இரட்டைக் குழந்தைகளில் ஒன்றான சியோன்ஷன் எனும் ஒரு வருடமும் மூன்று மாதங்களுமான குழந்தையே, கடந்த 19ஆம் திகதி உயிரிழந்துள்ளது.

வீட்டில் விளையாடிக் கொண்டிருந்த போதே, கால்வாயில் விழுந்து குழந்தை உயிரிழந்துள்ளது.



முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிபதி ரி.சரவணராஜா சம்பவ இடத்துக்குச் சென்று பார்வையிட்டு விசாரணைகளை முன்னெடுத்துள்ளதுடன், குழந்தையின் சடலம், மரண விசாரணைகளின் பின்னர் பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டது.

இச்சம்பவம் தொடர்பில் புதுக்குடியிருப்பு பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

நாட்டின் பொருளாதார நோய்க்கு ஜனாதிபதியிடம்

# நிவாரணம் இல்லை

வ. சக்தி

தற்போதைய காலகட்டத்தில் நாட்டில் பொருளாதார நோய் ஏற்பட்டுள்ளதாகவும் அந்நோய்க்கான நிவாரணத்தை ஜனாதிபதியால் கொடுக்க முடியாமல் போயுள்ளதாகவும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கோ.கருனாகரம் (ஜனா) தெரிவித்தார்.

இந்தப் பொருளாதார நோய்க்கும் மேலாக எங்களது உரிமையைப் பெறுவதற்கான நோய் இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

நாட்டு வைத்தியர் க.விஸ்வலிங்கம் எழுத்திய 'நோய் நிவாரணி' எனும் நூல் வெளியீட்டு விழாவும் சித்த வைத்திய முகாமும், மட்டக்களப்பு, பழுகாமம் சிவன் கோவில் முன்றலில் நேற்று முன்தினம் (20) நடைபெற்றது.

இதன்போது கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.



இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில், "நோய் நிவாரணி என்ற புத்தகம் உண்மையிலேயே தமிழ் இனத்துடன் சம்பந்தப்பட்ட புத்தகமாக நான் பார்க்கின்றேன்.

"ஏழு தசாப்தங்களுக்கு மேலாக அஹிம்சைப் போராட்டங்கள், ஆயுதப் போராட்டங்கள் நடந்தி, 2009ஆம் ஆண்டு ஆயுதப் போராட்டம் மௌனிக்கப்பட்டாலும் அந்த நோய்க்கான நிவாரணம் தற்போது வரை எங்களுக்கு கிடைக்கவில்லை.

"அந்த நிவாரணத்தை நாங்கள் எங்கு, யாரிடம் இருந்து பெறுவது என்பதில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு, தமிழ்த் தேசிய பரப்பிலே இருக்கின்ற ஏனைய கட்சிகள்கூட அங்கலாய்த்துக் கொண்டிருக்கின்றன.

"அந்த வகையில்தான் மாறி மாறி இந்த நாட்டை ஆண்டு கொண்டிருக்கும் எந்தவோர் அரசாங்கமும் எந்தவொரு ஜனாதிபதியும் எந்த நிவாரணத்தையும் கொடுக்க முடியாத சூழ்நிலையில் இருக்கின்றார்கள்" என்றார்.

சிரேஷ்ட ஊடகவியலாளர்

## நடராஜன் காலமானார்

வீ.ரி. சகாதேவராஜா



அம்பாறை மாவட்டத்தின் ஆலையடிவேம்பு, பனங்காட்டைச் சேர்ந்த சிரேஷ்ட ஊடகவியலாளர் இரத்தினம் நடராஜன், நேற்று முன்தினம் (20) காலமானார். மரணிக்கும் போது அவருக்கு வயது 64 ஆகும்.

இரண்டு பிள்ளைகளின் தந்தையான இவர், 1980 முதல் வீரகேசரி பத்திரிகையில் பொத்துவில் நிருபராக கடமையாற்றினார்.

தொடர்ந்து தினகரன் பத்திரிகையின் பனங்காடு நிருபராக கடமையாற்றியதுடன், சுதந்திர ஊடகவியலாளராக தமிழ்மிரர், உதயன், வலம்புரி, தமிழ்தந்தி, மெட்ரோ, தினப்புயல், பிபிசி தமிழ் போன்ற ஊடகங்களில் கடமையாற்றியுள்ளார்.

அம்பாறை மாவட்ட தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தை அமைப்பதில் இவர் பக்கபலமாக இருந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## கஞ்சா வியாபாரம்; ஒருவர் கைது

கனகராசா சரவணன்



மட்டக்களப்பு தலைமையக பொலிஸ் நிலையத்தின் கீழ் உள்ள சீலாமுனை பகுதியில் கஞ்சா வியாபாரத்தில் ஈடுபட்ட ஒருவரை, 200 கிராம் கேரளா கஞ்சாவுடன் கைது செய்துள்ளதாக தெரிவித்தனர்.

மாவட்ட பொலிஸ் புலனாய்வு பிரிவுக்கு கிடைத்த தகவலையடுத்து, குறித்த பகுதியிலுள்ள வீட்டை பொலிஸார் நேற்று முன்தினம் (20) முற்றுகையிட்டனர்.

இதன்போதே கஞ்சா வியாபாரத்தில் ஈடுபட்ட மேற்படி நபரை, கேரளா கஞ்சாவுடன் பொலிஸார் கைது செய்தனர்.

சம்மாந்துறை

## ஸ்ரீ பத்ரகாளியம்பாள் எண்ணெய்க்காப்பு

சகா

வரலாற்றுப் பிரசித்திபெற்ற சம்மாந்துறை தமிழ்க்குறிச்சி ஸ்ரீ பத்ரகாளி அம்பாள் கோவிலின் புனராவர்த்தன மஹா கும்பாபிஷேக குடமுழுக்கு பெரும்சாந்தி பெருவிழாவின் எண்ணெய்க்காப்பு சாத்தும் நிகழ்வு, இன்று (22) நடைபெறவுள்ளது.

இப்பெருவிழா, வாஸ்துசாந்தி, கணபதி ஹோமம் உள்ளிட்ட கிரியைகளுடன் நேற்று (21) ஆரம்பமாகியது.

கும்பாபிசேக பிரதமகுரு சிவாச்சர்ய திலகம் சிவஸ்ரீ சண்முக மகேஸ்வரக் குருக்கள் தலைமையில் மஹா கும்பாபிசேக கிரியைகள் யாவும் நடைபெற்று வருகின்றன.

இன்றைய எண்ணெய்க்காப்பு சாத்தும் வைபவத்தை தொடர்ந்து, நாளை (23) புதன்கிழமை 9.51 மணி தொடக்கம் 11.03 மணி வரையுள்ள சுபமுகூர்த்த வேளையில் மஹா கும்பாபிஷேகம் நடைபெறவுள்ளது.



மட்டக்களப்பில்

## தேசிய பொலிஸ் வீரர்கள் தினம்

வா. கிருஸ்ணா, கனகராசா சரவணன்

இலங்கை பொலிஸ் திணைக்களத்தின் 158ஆவது தேசிய பொலிஸ் வீரர்கள் தினம் நாடளாவிய ரீதியில் நேற்று (21) அனுஷ்டிக்கப்பட்டது.

நாட்டுக்காக உயிர்நீர்த்த பொலிஸ் வீரர்களை நினைவுகூரும் வகையில் நடத்தப்படும் இந்நிகழ்வின் மட்டக்களப்பு மாவட்ட பிரதான நிகழ்வு, மட்டக்களப்பு மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்தில் நடைபெற்றது.

அக்காரியாலயத்தின் முன்பாகவுள்ள பொலிஸ் வீரர்கள் நினைவுத் தூபியில், மாவட்ட உதவி பொலிஸ் அத்தியட்சகர் எல்.ஆர். குமாரசிறி தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

நிகழ்வில் உதவி பொலிஸ் அத்தியட்சகர்கள், மாவட்ட பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகள், உயிர்நீர்த்த பொலிஸ் உத்தியோகத்தர்களின் உறவினர்கள், ஓய்வுபெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

இதன்போது பொலிஸ் கொடியேற்றப்பட்டதுடன், பொலிஸ் வீரர்கள் நினைவுத்தூபியில் மலரஞ்சலி செலுத்தப்பட்டதுடன் உயிர்நீர்த்த பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு இரண்டு நிமிட அஞ்சலியும் செலுத்தப்பட்டது.

இதுவரையில் இலங்கையில் 3,143 பொலிஸ் உத்தியோகத்தர்கள் உயிரிழந்துள்ளதுடன், இதில் யுத்த காலத்தில் 2,598 பொலிஸ் உத்தியோகத்தர்களும் ஏனைய வகையில் 545 பொலிஸ் உத்தியோகத்தர்களும் உயிரிழந்துள்ளனர் என இங்கு உரையாற்றிய மட்டக்களப்பு மாவட்ட உதவி பொலிஸ் அத்தியட்சகர் எல்.ஆர். குமாரசிறி தெரிவித்தார்.







ஒரேயொரு சிலிண்டருக்காக

# ஒருவாரமாக அலையும் மாணவன்

எஸ்.யோகா

கம்பளை-அம்பேகமுவ வீதியில் உள்ள சிலிண்டர் விற்பனை நிலையத்தில் சமையல் எரிவாயு சிலிண்டர் ஒன்றைப் பெற்றுக்கொள்வதற்காக மாணவர் ஒருவர், கடந்த ஏழு நாள்களாக வந்து செல்கிறார்.

பாடசாலை சீருடையில் நேற்றைய (21) தினமும் சிலிண்டரைப் பெற்றுக்கொள்வதற்காக



வந்திருந்த மாணவன், சிலிண்டர் கிடைக்காமல் வெறுங்கையுடன் நேற்றும் வீடு திரும்பியுள்ளார்.

சிலிண்டரை பெற்றுக்கொள்ள, அதிகாலையில் இருந்தே நீண்ட வரிசையில் காத்திருந்தமையால் அவரால் நேற்று (21) பாடசாலைக்குக்கூட செல்ல முடியவில்லையென மாணவன் தெரிவித்துள்ளார்.

தனது தாய்க்கு நீண்ட வரிசையில் காத்திருந்து சிலிண்டரைப் பெற்றுக்கொள்வது சிரமம் என்பதாலேயே சிலிண்டரை பெற்றுக்கொள்ள தினமும் வரிசையில் நிற்க வேண்டிய நிலை தனக்கு ஏற்படுவதாகவும் அந்த மாணவன் மேலும் தெரிவித்தார்.

# டியூஷன் கட்டணங்களும் அதிகரித்தன

## பெற்றோர் அவதி

அஜித்லால் சாந்தஉதய

நாட்டில் நிலவி வரும் கடதாசி தட்டுப்பாடு, தொடர்ந்து அமலில் உள்ள மின்வெட்டுக்கு மத்தியில் டியூஷன் வகுப்புகளுக்கான கட்டணங்களும் இரண்டு, மூன்று மடங்காக அதிகரிக்கப்பட்டுள்ளதால் தாம் பெரும் சிரமங்களுக்கு முகங்கொடுப்பதாக இரத்தினபுரி மாவட்ட பெற்றோர்கள் தெரிவிக்கின்றனர்.

புலமைப் பரிசில், உயர்தரம், சாதாரண தரம் போன்ற தேசிய பரீட்சைகளுக்கு முகம்கொடுக்கும் மாணவர்களுக்கு பரீட்சை வினாத்தாள்களை அச்சிட்டு வழங்குவதற்கான கட்டணங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளன. இதனால், டியூஷன் வகுப்புகளுக்கு அதிகளவான கட்டணங்களை அறிவிட தீர்மானித்துள்ளதாக மேலதிக வகுப்புகளை நடத்தி வரும் ஆசிரியர்கள் தெரிவிக்கிறார்கள்.

கடதாசிகளைப் பயன்படுத்தி வினாத்தாள்கள் போன்றவற்றை அச்சிடுவதற்கு அதனை நகல் எடுப்பதற்கான கட்டணங்கள் 200 சதவீதமாக அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும், நாட்டில் காணப்படும் மின்வெட்டால் அச்சுநிறுவனங்கள் ஜெனரேட்டர்களைப் பயன்படுத்தியே அச்சுப் பணிகளை மேற்கொள்வதால் அதிகளவான கட்டணங்களை அவர்கள் அறிவிடுவதாகவும் ஆசிரியர்கள் தெரிவிக்கிறார்கள்.

இதேவேளை, மின்வெட்டு காரணமாக டியூஷன் வகுப்புகளை நடத்துவதற்கும் தற்போது தாம் ஜெனரேட்டர்களைப் பயன்படுத்தி வருவதாகவும், இதனால், டியூஷன் வகுப்புகளுக்கான கட்டணங்கள் அதிகரிப்பதற்கு இதுவும் ஒரு காரணம் எனவும் ஆசிரியர்கள் கூறுகிறார்கள்.



குப்பைகளை எரியூட்டுவதால்

# சுவாசிப்பதில் சிரமம்

## ஹட்டன் மக்கள் குற்றச்சாட்டு

சுதத் எச்.எம்.ஹேவா

ஹட்டன் நகரில், அந்தந்த இடங்களில் வைத்தே பொலித்தீன் உள்ளிட்ட குப்பைகள் எரிக்கப்படுவதால், அப்பிரதேச மக்கள் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்து வருகிறார்கள்.

ஹட்டன் - டிக்கோயா நகர சபையால் ஹட்டன் பிரதேசத்தில் சேகரிக்கப்படும் குப்பைகளை அந்தந்த இடங்களில் வைத்தே, நகர சபையின் ஊழியர்கள் சிலர் எரித்து வருவதாகப் பிரதேச மக்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

அந்தந்த இடங்களில் வைத்தே பொலித்தீன் போன்ற குப்பைகளை நகர சபை ஊழியர்கள் எரித்து வருவதால், சுவாசிப்பதற்குச் சிரமமாக இருப்பதாகவும், நகர சபையின் ஊழியர்களின் இதுபோன்ற செயற்பாடுகள், தமக்குக் கவலையளிப்பதாகவும் பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்துள்ள ஹட்டன் - டிக்கோயா நகர சபையின் தவிசாளர் சடையன் பாலேந்திரன், அந்தந்த இடங்களில் வைத்தே குப்பைகள் எரிக்கப்படும் சம்பவம் தொடர்பில் ஆராயுமாறு நகர சபையின் பொது சுகாதாரப் பரிசோதகர்களுக்கு ஆலோசனை வழங்கியுள்ளதாகக் கூறினார்.

கொரோனா தொற்றியிருந்த

# ஓய்வு பெற்ற அதிபர் மரணம்

கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி, மொனராகலை பொது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த ஓய்வுபெற்ற அதிபர் உயிரிழந்துள்ளார்.

புத்தளம், மெதகமவைச் சேர்ந்த ஆர்.எம். சந்திரசேன என்பவரே மரணமடைந்துள்ளார். இவர், மூன்று பிள்ளைகளின் தந்தையாவார்.

தொற்றுக்குள்ளாகி உயிரிழந்த ஓய்வுபெற்ற அதிபரின் இறுதிக் கிரியைகள் மொனராகலை மயானத்தில் சுகாதார வழிகாட்டல்களின் கீழ் நேற்று (21) நடைபெற்றது.





# பாக். உயர்ஸ்தானிகர் கண்டிக்கு விஜயம்

இக்பால் அலி

இலங்கைக்கான பாகிஸ்தானின் உயர்ஸ்தானிகர் ஒய்வுநிலை மேஜர் ஜெனரல் உமர் பாரூக் புக்கிரி, கண்டி ஜின்னா ஞாபகார்த்த நிலையத்துக்கு விஜயம் மேற்கொண்டுள்ளார்.

இதன்போது, கண்டி முஸ்லிம் வர்த்தக சங்கத்தினருடன் கலந்துரையாடலிலும் ஈடுபட்டார்.

இலங்கையிலுள்ள மாணவ, மாணவிகளுக்கான அல்லாமா இக்பால் ஞாபகார்த்த புலமைப் பரிசில் திட்டம் க.பொ.த (சாதாரண தரம்) சித்தியடைந்த மாணவர் மாணவிகளுக்கான ஜின்னா ஞாபகார்த்த நிதி உதவி வழங்குதல் கலாநிதி, முதுநிலைமாணி போன்ற துறைகளுக்கு இன, மத பேதமின்றி மாணவர்களை சேர்த்துக் கொள்ளப்படுவார்கள் எனவும் உயர்ஸ்தானிகர் இதன்போது தெரிவித்துள்ளார்.

கண்டி முஸ்லிம் வர்த்தக சங்கம் அரசாங்கத்தோடும் ஏனைய சமூகங்களோடும் ஒன்றிணைந்து முன்னெடுத்துவரும் மனிதாபிமான உதவிகள் குறித்த காணொளி விளக்கமொன்றையும் உயர்ஸ்தானிகருக்கு அளித்தனர்.



# சத்துணவுப் பொதிகள் போதுமானதாக இல்லை

## தாய்மார்கள் குற்றச்சாட்டு

சுமனசிறி குணதிலக

சிறுவர், மகளிர் அமைச்சின் கீழ் கர்ப்பிணிப் பெண்கள், பாலுட்டும் தாய்மார்களுக்கு மாதாந்தம் வழங்கப்படும் 2 ஆயிரம் ரூபாய் பெறுமதியான சத்துணவுப் பொதி போதுமானதாக இல்லை என தாய்மார்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

கர்ப்பிணிகள், பாலூட்டும் தாய்மார்களுக்கு மாதாந்தம் 2 ஆயிரம் ரூபாய் பெறுமதியான போஷாக்கு உணவுகளை வழங்கி அவற்றை சதொச, அங்கிகரிக்கப்பட்ட வர்த்தக நிலையங்களில் இருந்து பெற்றுக்கொள்வதற்கும் கடந்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருந்தது.

இதன்படி குடும்பல உத்தியோகஸ்தரின் அறிவுறுத்தலின்பேரில் அந்தந்த பிரதேச செயலகங்களின் ஊடாக போஷாக்குப் பொதிக்கான பொருட்களை பெற்றுக்கொள்வதற்கான அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்டது.

அரிசி, உளுந்து, பருப்பு, கடலை, கௌபி, முந்திரி, முட்டை, நெத்தலி உள்ளிட்டவற்றைப் பெற்றுக்கொள்ள முடியும். எவ்வாறாயினும் நாட்டில் தற்போது இப்பொருட்களுக்கான விலைகள் பாரியளவில் அதிகரிக்கப்பட்டுள்ளதால் குறைந்த அளவிலேயே இப்பொருட்களைப் பெற்றுக்கொள்ள முடிவதாக தாய்மார்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

# கொட்டகலையில் டீசல் இல்லை

ரஞ்சித் ராஜபக்ஷ

ஹட்டன், கொட்டகலை சிபெட்கோ எரிபொருள் நிரப்பு நிலையத்தில் எரிபொருளைப் பெற்றுக்கொள்வதற்காக, நுவரெலியா பிரதான வீதியின் இரு மருங்குகளிலும் வாகனங்கள் நீண்ட வரிசையில் நேற்று (21) காத்திருந்தன.

கொட்டகலை சிபெட்கோ எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு எரிபொருள் கிடைக்கவில்லை எனவும், எவ்வாறாயினும் எரிபொருள் கிடைக்கும் வரையில் தாம் காத்திருக்கப்போவதாக சாரதிகள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, இதுவரையில் தமக்கு டீசல் வழங்கப்படவில்லை எனத் தெரிவிக்கும் கொட்டகலை சிபெட்கோ எரிபொருள் நிரப்பு நிலையத்தின் ஊழியர்கள், டீசல் எப்போது கிடைக்கும் என்பதை உறுதியாகக் கூற முடியாது எனவும் தெரிவித்தனர்.



# தொழிற்சங்க உறுப்பினர்களின் நலனுக்காக நடவடிக்கை எடுப்பேன்

பெருந்தோட்ட சமூக தொடர்பாடல் வசதியளிப்பாளர் உத்தியோகத்தர்களின் தொழிற்சங்க உறுப்பினர்களின் நலனுக்காக உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படுமென அத்தொழிற்சங்கத்தின் தலைவர் ரூபன் பெருமாள் தெரிவித்துள்ளார்.

தோட்ட வீடமைப்பு மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சின் ஊடாக மலையகத்தில் காணப்படும் அரச நிறுவனங்களில் சேவை புரியும் பெருந்தோட்ட சமூக தொடர்பாடல் வசதியளிப்பாளர் உத்தியோகத்தர்களின் தொழிற்சங்கத்தின் தேசிய மாநாடு நுவரெலியா, நேச்சர் பெர்ஸ்ட் கிளப்பில் நடைபெற்றது.

இதன்போது தொழிற்சங்கத்தின் எதிர்காலத்துக்கான புதிய தலைவராக ரூபன் பெருமாள், செயலாளராக கே.எஸ்.எம்.பர்ஷான், பொருளாளராக ஜீ.பாஸ்கரன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.




மேலும், நிர்வாக சபை உறுப்பினர்களாக நுவரெலியா, பதுளை, கண்டி, இரத்தினபுரி, கேகாலை, களுத்துறை, காலி, மாத்தறை ஆகிய மாவட்டங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது, கருத்து தெரிவித்த புதிய தலைவர் ரூபன் பெருமாள், தொழிற் சங்கத்தின் உறுப்பினர்களின் நலனுக்காக உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதாகவும், இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமானோடு கலந்துரையாடி, உறுப்பினர்கள் முகங்கொடுக்கும் சிரமங்களைத் தீர்த்து வைப்பதற்கு தன்னால் இயன்ற விடயங்களை மேற்கொள்ள உள்ளதாகவும் தெரிவித்தார்.

பல வருட காலமாக மலையக மக்கள் அரச காரியாலயங்களில் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள பல சிரமங்களை எதிர்நோக்கி வந்த நிலையில், 2006ஆம் ஆண்டு பெருந்தோட்ட சமூக தொடர்பாடல் உத்தியோகஸ்தர்கள் பதவியேற்றதை தொடர்ந்து, தற்போது அரச அலுவலகங்களில் சேவைகளை இலகுவாக பெற்றுக்கொள்ளக் கூடியதாக நிலைமை மாறியுள்ளது. மேலும், அபிவிருத்தி செயற்றிட்டங்களை முன்னெடுக்கும் சந்தர்ப்பங்களிலும் இவர்களது சேவை மலையக மக்களுக்கு பயனடையும் வகையில் அமைகிறது எனவும் கூறினார்.







## மலையக மக்கள் முன்னணியின் மகளிர் தினம்

'பால்நிலை சமத்துவத்தை உறுதி செய்வோம்" எனும் தொனிப்பொருளின் கீழ், மலையக மக்கள் முன்னணியின் மகளிர் தினவிழா, அக்கட்சியின் தலைவர் வே. இராதாகிருஸ்ணன் எம்.பியின் தலைமையில் பதுளை தபாலக கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் (20) நடைபெற்றது.

(படங்கள்: எஸ். கணேசன்)

# இராதாவை பிடித்து இழுக்கிறார் புஷ்பா

நீலமேகம் பிரசாந்த்

சர்வகட்சி மாநாட்டில் பங்கேற்குமாறு அரசாங்கம் அனைத்து கட்சிகளுக்கும் கோரிக்கை விடுத்துள்ளது. இந்நிலையில் சர்வகட்சி மாநாட்டில் பங்கேற்க வேண்டாமென மலையக மக்கள் முன்னணியின் தலைவர் இராதாகிருஸ்ணனுக்கு கட்சியின் முக்கிய உறுப்பினர்களூடாக கோரிக்கை விடுக்கப்பட்டிருப்பதாகவும் எனவே, சர்வகட்சி மாநாட்டில் பங்கேற்பது தொடர்பில் கலந்தாலோசித்து தீர்மானத்தை எடுக்க வேண்டுமென கோரிக்கை விடுத்துள்ளதாகவும் மலையக தொழிலாளர் முன்னணியின் நிதிச்செயலாளர் புஷ்பா விஸ்வநாதன் தெரிவித்துள்ளார்.

நாட்டின் பொருளாதாரம் பாரிய பின்னடைவை சந்தித்துள்ளது. மக்கள் அன்றாடம் பாரிய இன்னல்களை எதிர்கொண்டு வருகின்றனர். நாட்டையும் மக்களையும் சீர்குலைத்து, நாட்டை சுடுகாடாக்கி வைத்திருக்கும் இவ்வரசாங்கம் வெளியேற வேண்டுமே தவிர, சர்வகட்சி மாநாட்டைக் கூட்டி எவ்வித பிரயோசனமும் கிடையாது.



எனவே, மலையக மக்கள் முன்னணி பங்கேற்கக் கூடாதென மலையக மக்கள் முன்னணியின் கட்சி உறுப்பினர்களால் மலையக மக்கள் முன்னணிக்கு கோரிக்கை விடுக்கப்பட்டிருப்பதாகவும் அது தொடர்பில் விரைவில் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படுமெனவும் நிதிச்செயலாளர் புஷ்பா விஸ்வநாதன் தெரிவித்தார்.

# பொறுமையாகவும் விழிப்பாகவும் இருக்கவேண்டிய காலமிது

ஒவ்வொருவரும் பேசிக்கொள்வதைக் காதுகொடுத்துக் கேட்டால், வாழ்க்கையில் சலிப்படைந்து விட்டமையையே வார்த்தைகளின் மூலம் வெளிப்படுத்துகிறார்கள். அவர்களிடத்தில் வெறுமை தொற்றிக்கொண்டுள்ளது. இன்னும் சிலர் கோபத்தின் உச்சிக்கே சென்றுள்ளனர்.

இந்த நெருக்கடிகளுக்கு மத்தியில், குறுக்குவழியில் சம்பாதித்துக் கொள்வோரும் இருக்கத்தான் செய்கின்றனர். கடைகளுக்குள் காலடி எடுத்துவைப்பதற்கே பலரும் அஞ்சுகின்றனர். நினைத்துப் பார்க்காத அளவுக்கு, எல்லாப் பொருட்களின் விலைகளும் அதிகரித்துள்ளன. ஆனால், வாழ்க்கையை கொண்டுநகர்த்த வேண்டுமாயின், கட்டாயமாகப் பொறுமையை கடைப்பிடிக்கவே வேண்டும்.

எம்மை வேண்டுமென்றே சீண்டிப்பார்த்து, அதில் குளிர்காய முயற்சிப்பவர்கள் எம்மைச்சுற்றி இருக்கின்றனர். வரிசையில் கால்கடுக்க நின்று கொண்டிருக்கையில், அந்த வரிசையின் இடைநடுவில் யாராவது நுழைந்தாலும் கோபம் கட்டாயமாக வரும்; எதிர்ப்புக் குரல்களும் வலுக்கும்.

ஆனால், எரிபொருட்களைப் பெற்றுக்கொள்வதற்காக, வரிசையில் நின்றிருந்த நிலையில், மயங்கி விழுந்து மரணமடைந்தோரின் எண்ணிக்கை, நேற்றுடன் (21) மூன்றாக அதிகரித்துவிட்டது. சரியான காரணம் வெளிவராவிடினும், எரிபொருளைப் பெற்றுக்கொள்வதற்காக நின்றிருந்த, இருவருக்கு இடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் கைகலப்பாக மாறி, அதிலொருவர் மரணித்தும் விட்டார்.

நெருக்கடியான நிலைமையொன்றுக்கு நாமெல்லாம் முகங்கொடுத்துக் கொண்டிருக்கின்றோம். இந்த நெருக்கடி இனம், மதம், மொழி பார்த்துத் தொற்றிக்கொள்ளவில்லை. எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை பார்க்கையில், அங்கு எவ்விதமான பேதங்களையும் காண முடியவில்லை.

'வரிசையில் நிற்பது' சகலருக்கும் பொதுவான பிரச்சினையாகும். கோபம் வருவது, மனிதனின் இயல்பான குணங்களில் ஒன்றாகும். எனினும், அதைக் கட்டுப்படுத்திக்கொள்ள வேண்டும். இல்லையேல், குற்றவாளியாக்கப்படும் நீங்கள், குடும்பத்தை பிரிந்து, சிறையில் வாடவேண்டிய நிலைமைதான் ஏற்படும்.

கோபத்தை அடக்கி, பொறுமையைக் கடைப்பிடித்தால், வாழ்க்கையில் நீண்ட தூரத்துக்கு பயணிக்கமுடியும் என்பதை நினைவில் வைத்துக்கொண்டு, முதியவர்களையும் சிறார்களையும் வரிசையில் நிற்க வைப்பதைத் தவிர்த்துக் கொள்வது நல்லது.

டீசல், பெட்ரோல், சமையல் எரிவாயு வரிசையுடன், மண்ணெண்ணெய் வரிசையும் நீண்டு சென்றுகொண்டிருக்கின்றது. நாட்டில் நிலவும் வரட்சியான வானிலைகூட, அவர்களை நிலைதடுமாறச் செய்துவிடும்.

அதேபோல், பாடசாலைகளுக்குச் செல்லாது சிறுவர்களும் மண்ணெண்ணெய் வரிசையில் நின்று கொண்டிருப்பதை அவதானிக்க முடிகிறது. வீட்டில் அடுப்பு எரியாதபோது, பாடசாலைக்குச் செல்வது இயலாத காரியமாகும். அத்துடன், இவ்வாறான குடும்பங்களில், பெற்றோர் இருவரும் கூலிவேலைக்குச் சென்றுவிடுவர்; சிறுவர்கள்தான் வரிசையில் நிற்கவேண்டும். கூலிவேலைக்குச் செல்லாமல், மண்ணெண்ணெய் வரிசையில் நின்றுவிட்டால், முழுநாளும் பட்டினியால் வாடவேண்டிய நிலைமை ஏற்பட்டுவிடும்.

இவையெல்லாம் நீண்ட காலத்தில் பெரும் தாக்கத்தை செலுத்துமென்பதை நினைவில் வைத்துக்கொண்டு, தீர்க்கமான முடிவுகளை எட்டவேண்டியது ஆட்சியாளர்களின் கைகளிலேயே உள்ளது.




## தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




## வாழ்வியல் தரிசனம்

தோல்வி, ஏழ்மை, ஏமாற்றங்கள், அவமானங்கள், சோகம் போன்றவற்றின் தாக்கங்கள் ஒருவரை வீழ்த்த முனைந்தாலும், அவற்றை உடைத்தெறிந்து சாதனை படைக்கிறார்கள் பலர்; உலகம் எமக்கானது.

சொல்லப்போனால் ஒருவரிடத்தில் முன்னேற்றங்களை உருவாக்குவதும் கூட, தோல்வியும் துன்பங்களும் ஏக்கங்களும் என்பதை அநேகர், தங்களின் அனுபவங்களின் ஊடாகச் சொல்வதுண்டு. கற்பாறை உளியால் அடிபட்டு அடிபட்டு, எளில்மிகு உருவங்களாகத் துலங்குவதுபோல், ஒருவரின் துன்பங்கள், கஸ்டங்கள் கூட, அவரின் எதிர்காலத்தை எளில்மிகுந்த சொர்க்கமாக்கி விடுகின்றன.

மிகவும் பின்தங்கிய நிலையில் இருந்த ஏழைச் சிறுமி, தனது பெற்றோர் காட்டிய ஊக்கத்துடன் ஒலிம்பிக் போட்டியில் வெண்கலப் பதக்கத்தைப் பெற்றுக்கொண்டாள். குக்கிராமத்தில் பிறந்தவர்களால் கூட சாதனைகளை நிலைநாட்ட முடியும் என நிரூபித்தாள். இப்படி எத்தனையோ திறமையான பிள்ளைகள், வசதிகுறைந்த குடும்பத்தில் பிறந்து, தமது திறமைகளை வெளிக்காட்டுகிறார்கள். இவர்களை உலகம் கண்டுகொள்ள வேண்டும்.

மகிழ்ச்சியுடன் வாழ்வதற்கும் சகல திறமைகளையும் வளர்த்துக்கொள்வதற்குமே பூமித்தாய் எங்களை உருவாக்கினாள். எந்தத் தரத்தினரையும் போஷிப்பது, மனிதனின் கடமையாகும்.

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

## முஸ்லிம் அரசியல்வாதிகள்
# 'முட்டு' அரசியலால் சாதித்தது என்ன?

மொஹமட் பாதுஷா

பெருந்தேசியக் கட்சிகளுக்கு குறிப்பாக, ஆளும் கட்சிகளுக்கு காலம்காலமாக முட்டுக் கொடுத்து வருகின்ற முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள், அதன்மூலம் தமது சமூகத்துக்கு அனுகூலங்களைப் பெற்றுக் கொடுப்பதற்கு, காத்திரமான முயற்சிகளை எடுத்ததாகத் தெரியவில்லை. முஸ்லிம் சமூகத்தின் அபிலாஷைகளை, முறையாக முன்வைத்ததாகவும் அறியக் கிடைக்கவும் இல்லை.

அரசியல் என்பது, தேர்தல் காலங்களில் மாத்திரம் உயிர்த்தெழும் ஒரு தொழிலல்ல. அது எல்லாக் காலங்களிலும் உயிரோட்டமாக இருக்க வேண்டும். வாக்குகளைச் சூறையாடுவதற்கான களமாகத் தேர்தலையும் ஆயுதமாக மக்களையும் பயன்படுத்தி விட்டு, அதிகாரம் கிடைத்த பின்னர் சமூகத்தை மறந்து, தமது கஜானாக்களை நிரப்புவதிலேயே குறியாக இருக்கும் போக்கு மக்கள் சார்பு அரசியலல்ல.

சமூகத்துக்காக மேடைகளில் மாத்திரம் வாய்கிழியக் கத்தினால் போதாது. செயற்பாட்டுக் களத்தில் சமூக சிந்தனையோடு இயங்கவும் வேண்டும். முஸ்லிம்களின் நீண்டகால பிரச்சினைகளைப் பட்டியலிட்டு, ஒரு வருடத்துக்கு ஒரு பிரச்சினையையாவது தீர்க்க முயற்சிகளை எடுத்திருக்க வேண்டும். அப்படிச் செய்திருந்தால் கூட, கடந்த 25 வருடங்களில் ஆகக்குறைந்தது 25 பிரச்சினைகளாவது தீர்த்திருக்கலாம்.

ஒரு சமூகத்தின் பிரச்சினைகளை, அபிலாஷைகளை முன்வைக்க வேண்டுமென்றால், சம்பந்தப்பட்ட தலைவர்கள், எம்.பிக்களுக்கு, சமூகம் பற்றிய உண்மையான அக்கறை இருக்க வேண்டும். பிரச்சினைகளைத் தெளிவாகப் புரிந்து வைத்திருப்பதுடன் அதுபற்றிய ஆவணங்களையும் பேணி வரவேண்டும். பணத்துக்கும் பதவிக்கும் சோரம்போகாத தன்மை வேண்டும். சமூகத்தின் நலனுக்காக, ஏனைய முஸ்லிம் அரசியல்வாதிகளுடன் இணைந்து பணியாற்றுவதற்கான விருப்பார்வம் இருக்க வேண்டும்.

'ஆமாசாமி'களையும், 'ஜால்ரா' அடிக்கும் கூட்டத்தையும் தம்மோடு வைத்துக் கொண்டிருக்காமல், மேற்குறிப்பிட்டதைப் போன்ற சிறந்த பண்புள்ள சமூக சிந்தனையாளர்களையும் துறைசார்ந்த ஆளுமைகளையும் முஸ்லிம் தலைவர்கள் தம்மோடு வைத்திருக்க வேண்டும்.

'நீங்கள் செய்வதெல்லாம் சரி' என முகஸ்துதிக்காக சொல்கின்ற கூட்டம், நிச்சயமாகப் படுகுழியை நோக்கியே அழைத்துச் செல்கின்றது என்பதற்கு, நிகழ்காலத்தில் சிறந்த உதாரணம் ஆளும் கட்சியின் அரசாட்சியாகும்.

யுத்த காலத்தில், தமிழ்த் தேசிய அரசியல் வலுவிழந்திருந்தது. தமிழ்த் தேசிய அரசியல்வாதிகள் கூட, ஒரு கட்டத்தில் ஆயுதப் போராட்டத்திலேயே முழு கவனத்தையும் செலுத்தியிருந்தனர்.

இந்தப் பின்னணியில், யுத்தத்தில் புலிகள் தோற்கடிக்கப்பட்டமை, தமிழ் சமூகத்தின் பார்வையில் அபிலாஷைகளை பின்னடைவு என்றுதான் கூற வேண்டும். ஏனெனில், பல் பிடுங்கப்பட்ட பாம்பு போலவே பெருந்தேசியம் கருதியது எனலாம். அரசாங்கம் பேச்சுவார்த்தைக்கு முன்வருவதற்கே நீண்டகாலம் எடுத்தது.

இதனையெல்லாம் தாண்டி, தமிழ்த் தேசிய கூட்டமைப்பு உள்ளிட்ட தமிழ்த் தேசிய அரசியல்வாதிகள், தமது சமூகத்தின் அபிலாஷைகளைத் தீர்ப்பதற்கு இன்றுவரை முயற்சித்துக் கொண்டிருக்கின்றனர். அவர்கள் இதுவரை பெரிதாக எதையும் சாதிக்கவில்லை என்பது உண்மைதான். ஆனால், குறிப்பிடத்தக்களவுக்கு முன்னேறி வந்திருக்கின்றார்கள் என்பது கூர்ந்து கவனிப்போருக்குப் புரியும். இந்த விடயத்தில், முஸ்லிம் அரசியல்வாதிகளின் பெறுபேறு பூச்சியமாகும்.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பில், தமிழரசுக் கட்சி மட்டுமன்றி ஒரு காலத்தில் ஆயுத இயக்கங்களாக அறியப்பட்ட அணிகளும் அங்கம் வகிக்கின்றன. இவர்கள் எல்லோரும் ஒரு கூட்டமைப்பாக இணைந்திருக்கின்றார்கள். தமிழர்களின் விவகாரம் என்று வரும்போது, இதற்கு வெளியிலுள்ள அநேக தமிழ் அரசியல் அணிகளும் ஒன்றுசேர்வதைக் காண்கின்றோம்.

ஆனால், முஸ்லிம் அரசியலின் நிலைமை தலைகீழானது. இன்றுள்ள முஸ்லிம் கட்சிகள் பெரும்பாலும் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸில் இருந்து பிளவுண்ட துண்டங்களாகும். அநேகமான முஸ்லிம் அரசியல் தலைவர்கள் எம்.எச்.எம்.அஷ்ரப் என்ற ஓர் அரசியல் ஆசானின் பாசறையில் வளர்ந்தவர்கள். ஏனைய முஸ்லிம் எம்.பிக்களும் அவரது அரசியலை அண்ணாந்து பார்ப்பவர்கள்.

இவ்வாறு ஒரு கூட்டுக் கிளியாக இருந்த முஸ்லிம் அரசியல் தலைமைகள், இன்று வெவ்வேறு வழித்தடங்களில் பயணிக்கின்றனர். அதற்காகவே மக்களைக் கூறுபோடுகின்றனர். பல தமிழ் கட்சிகளும் இயக்கங்களும் சேர்ந்து கூட்டமைப்பாக மாறிய போதும், சமூக நோக்கில் ஒரே பாசறையில் வளர்ந்த இவர்களால் ஓர் அணியாக ஒன்றுசேர முடியவில்லை. அல்லது, அதனைவிட்டும் ஏதோவொன்று அவர்களைத் தடுக்கின்றது.

தமிழ்த் தரப்பு, இலங்கை அரசாங்கத்துக்கு எதிரான நிலைப்பாட்டைக் கொண்டது என்பது வெளிப்படையானது. உலக அளவில், இலங்கை அரசாங்கங்கள் தமிழர்களுக்கு எதிரான கொடுமைகளை நிகழ்த்தினார்கள் என்ற தோற்றப்பாட்டை கட்டமைத்துள்ளது.

குறிப்பாக, தமிழர் விவகாரத்தை இன்று ஐ.நா மனித உரிமைகள் பேரவை வரை கொண்டு சென்றுள்ளது. ஜெனீவாவில் அரசாங்கம் எதிர்கொள்கின்ற நெருக்கடிகளுக்கு, தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நகர்வுகளும் பிரதான காரணம் என்பது இரகசியமல்ல.

ஆனால், இத்தனையையும் செய்து கொண்டு, அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தைக்குச் செல்வதற்கு தமிழ்த் தேசிய கூட்டமைப்பு ஏற்பாடுகளைச் செய்கின்றது. தமிழர்களின் பிரச்சினைகளை, ஜனாதிபதியுடன் மட்டுமன்றி யாருடனும் பேசுவதற்கு சித்தமாக இருக்கின்றோம் என்று கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் பகிரங்கமாகவே சொல்கின்றார்.

தமிழ்த் தரப்பின் நகர்வுகளால், அரசாங்கம் உள்ளுக்குள் விசனமடைந்து இருந்தாலும் கூட, தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பெறுமானத்தை, கனதியை அவர்கள் குறைத்து மதிப்பிடவும் இல்லை; கேலி செய்யவும் இல்லை என்பது கவனிப்பிற்குரியது. இந்த விடயத்தில், முஸ்லிம் அரசியல் கட்சிகளையோ அல்லது, எம்பி.க்களையோ ஒரு பொருட்டாக, பெறுமதிவாய்ந்த தரப்பாக அரசாங்கங்கள் கருதுவதில்லை. ஏனெனில், அவர்கள் தமது கனதி என்ன என்பதை செயற்பாட்டில் வெளிக்காட்டவில்லை.

தனித்தனியாகவோ கூட்டமாகவோ அவர்களை விலைக்கு வாங்கி விடலாம் என்று ஆட்சியாளர்கள் நினைக்கின்றார்கள். அவர்களுக்கு 'எதைக் கொடுத்தால்' வாலை ஆட்டிக் கொண்டு, சத்தமின்றி இருப்பார்கள் என்பதை குறிப்பாக ராஜபக்ஷர்கள் நன்கு அறிந்து வைத்திருக்கின்றார்கள்.

இப்படியாக அரசாங்கத்துக்கு உள்நாட்டிலும் அழுத்தங்களைக் கொடுக்கும் தமிழ்த் தரப்பால், எந்தத் தயக்கமும் இன்றி ஆட்சியாளர்களை சந்திக்க முடியும் என்றால், தமது பிரச்சினைகளை அரசாங்கத்துடன் பேச முடியுமென்றால், இவ்வளவு காலமும் அரசாங்கங்களுக்கு முட்டுக் கொடுப்பதையே ஒரு வேலையாகச் செய்து கொண்டிருக்கின்ற முஸ்லிம் அரசியல்வாதிகளால் ஏன் அதனைச் செய்ய முடியாது?

90களில் இருந்தே முஸ்லிம் சமூகம் இணக்க அரசியலையே செய்து வருகின்றது. இதனை சமூகத்துக்காக வெற்றிகரமாக பயன்படுத்திய இரண்டு, மூன்று முஸ்லிம் அரசியல்வாதிகளில் மர்ஹூம் அஷ்ரப் முதலிடத்தில் உள்ளார்.

அவரது மரணத்துக்குப் பிறகு இணக்க அரசியல் என்பது, சோரம்போகும் அரசியலாக மாறியிருக்கின்றது. வெளிப்படையாக ஆளும் தரப்புக்கு ஆதரவளிப்பதும் மறைமுகமாக 'டீல்' பேசுவதுமான ஒரு குள்ளத்தனமான போக்காக இதனைக் கருதலாம்.

2019 ஜனாதிபதித் தேர்தலில் சஜித் பிரேமதாஸவை பிரதான இரு முஸ்லிம் கட்சிகள் ஆதரித்தன. 2020 பொதுத் தேர்தலிலும் இதுவே நடந்தது. ஜனாதிபதி தேர்தலின் பின்னர், மொட்டு அணியே வெற்றிபெறும் என்பது வெளிப்படையாகத் தெரிந்தது. அந்தச் சூழ்நிலையிலும் மறுதரப்பை முஸ்லிம் அணிகள் ஆதரித்தமை வேறு விடயம்.

ஆனால், இந்தத் தேர்தல்களில் மொட்டு அணி எந்தளவுக்கு முஸ்லிம் இனவெறுப்பு அரசியலை மூலதனமாக்கியதோ, அதற்கு சரிநிகராக பிரதான முஸ்லிம் கட்சிகள் ராஜபக்ஷர்களை விமர்சித்தனர். இனவாதத்துக்கு எதிராக வாக்களிக்குமாறு கோரினார்கள். இதன்படி கணிசமான முஸ்லிம்கள், ராஜபக்ஷர்களுக்கு எதிரானவர்கள் என்ற தோற்றப்பாடு உருவானது.

ஆனால், அதன்பிறகு என்ன நடந்தது? முஸ்லிம் எம்.பிக்கள் 20ஆவது திருத்தத்துக்கு ஆதரவளித்தனர். அரச ஆதரவு எம்.பிக்களாக மாறிப் போனார்கள். கட்சித் தலைவர்கள் பெரிதாக அறிக்கை விட்டார்களே தவிர, அந்த எம்.பிகளுக்கு எதிராக எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

தேர்தலுக்கு முன்பிருந்தே ஒரு பக்குவமான அரசியலை செய்திருக்க வேண்டும். தேர்தல் பிரசாரங்களை மிதமாக முன்னெடுத்திருக்க வேண்டும். அதைவிடுத்து, முஸ்லிம்களை உசுப்பேற்றி, ராஜபக்ஷர்களுக்கு எதிராகத் திருப்பிவிட்டு, மக்களை நட்டாற்றில் விட்டதைப் போல கேவலம் வேறு எதுவும் இல்லை.

சரி அதையும் சகித்துக் கொள்வோம். இவ்வாறு அரசாங்கத்துக்கு ஆதரவளிப்பதன் மூலம், அதாவது முட்டுக் கொடுப்பதன் ஊடாக, முஸ்லிம் எம்.பிக்கள் எதைச் சாதித்துள்ளார்கள்? கடந்த 20 வருடங்களில் இவ்வாறு அரசாங்கத்துக்கு அல்லது எதிரணிக்கு ஆதரவளித்தன் ஊடாக, முஸ்லிம் சமூகத்தின் எத்தனை பிரச்சினைகளுக்கு தீர்வு கண்டுள்ளார்கள்?

எதிர்ப்பு அரசியலைச் செய்கின்ற தமிழர் தரப்பால் அரசாங்கத்துடன் பேச முடிகின்றது என்றால், இணக்க அரசியல் என்ற கோதாவில் முட்டுக்கொடுக்கின்ற முஸ்லிம் அரசியல்வாதிகளால் மேல்மட்ட ஆட்சியாளர்களை முறையாக சந்திக்கவோ, சமூகப் பிரச்சினைகளை முன்வைக்கவோ ஏன் முடியவில்லை?

இதற்கு முழுமுதற் காரணம் அரசியல்வாதிகள். இரண்டாவது காரணம், திரும்பத் திரும்ப வாக்களிக்கின்ற மக்கள். எனவே, முஸ்லிம் அரசியல் மேற்குறிப்பிட்டது போல, சமூகம் சார்ந்த அரசியலாக மாற வேண்டும் என்றால், மக்களும் அரசியல்வாதிகளும் திருந்த வேண்டும்.

## கடிதங்கள்

### உடைந்த நிலையிலுள்ள மின்கம்பம்



புசல்லாவை, நயபனை தோட்ட வைத்தியசாலைக்கு அருகில் பிரதான வீதியில் அமைந்துள்ள மின்கம்பம், உடைந்து வளைந்த நிலையில், வீதியால் செல்வோருக்கு மிகவும் ஆபத்து நிறைந்ததாகக் காணப்படுகின்றது.

இதனால் இப்பிரதேசத்துக்கு வருபவர்களும் குறித்த மின்கம்பத்தினூடே மின் இணைப்பைப் பெற்றவர்களும் அச்சமடைந்துள்ளனர். இவ்விடயம் தொடர்பாக, கம்பளை மின்பொறியியலாளர் காரியாலயத்துக்கு பலமுறை அறிவிக்கப்பட்டபோதும், கடந்த ஒரு வருடத்துக்கும் மேலாகத் திருத்தப்படாமல் உள்ளதாக, பொது மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

நயபனை பிரதேச வைத்தியசாலை, வைத்தியரின் உத்தியோகபூர்வ இல்லம், நலன்புரி உத்தியோகத்தர், சிறுவர் அபிவிருத்தி நிலைய உத்தியோகத்தர் இல்லம் போன்ற இடங்களுக்கு இக்கம்பத்தினூடாகவே மின்இணைப்பு வழங்கப்பட்டு உள்ளது. எனவே, உயிராபத்துகளை விளைவிக்கக் கூடிய இந்த மின்கம்ப உடைவை, உடனடியாக இதைச் சீர்செய்து தருமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் வேண்டுகோள் முன்வைக்கப்படுகின்றது.

மெய்யன்

சென்னை

சூடுபிடிக்கிறது ஜெயா மரணம்

# “எனக்கு தெரியாது”

அப்பலோ மருத்துவமனையில் சிகிச்சைப் பெற்று வந்த ஜெயலலிதாவுக்கு வழங்கிய சிகிச்சை குறித்தோ, சிகிச்சை வழங்கிய மருத்துவர்கள் குறித்தோ தனக்கு எதுவும் தெரியாது என்று ஆறுமுகசாமி ஆணையத்திடம் அண்ணா திராவிட முன்னேற்ற கழகத்தின் ( அ.தி.மு.க) ஒருங்கிணைப்பாளர் ஓ.பன்னீர்செல்வம் கூறியுள்ளார்.

ஜெயலலிதா மரணம் குறித்து விசாரணை நடத்தி வரும் ஆறுமுகசாமி ஆணையத்தின் முன் ஆஜராகுமாறு அ.தி.மு.க ஒருங்கிணைப்பாளர் ஓ.பன்னீர்செல்வம், சசிகலாவின் அண்ணன் மனைவி இளவரசி ஆகியோருக்கு சம்மன் அனுப்பப்பட்டிருந்தது. அதன்படி விசாரணை ஆணையத்தின் முன்பாக இருவரும் நேற்று (21) ஆஜராகியிருந்தனர்.

விசாரணை ஆணையத்தின் முன் முதல்முறையாக அ.தி.மு.க ஒருங்கிணைப்பாளர் ஓ.பன்னீர்செல்வம் ஆஜரானார். அப்போது அவரிடம் ஆணையத்தின் சார்பில், “மறைந்த முதலமைச்சர் ஜெயலலிதாவுக்கு என்ன சிகிச்சை வழங்கப்பட்டது? எந்தெந்த மருத்துவர்கள் சிகிச்சை வழங்கினார்கள் என்பது குறித்த விவரங்கள் தெரியுமா” எனக் கேட்கப்பட்டது.



அதற்குப் பதிலளித்த ஓ.பன்னீர்செல்வம், “மறைந்த ஜெயலலிதாவுக்கு நீரிழிவு நோய் இருந்ததை தவிர, அவருக்கு இருந்த வேறு உடல் உபாதைகள் பற்றித் தெரியாது. 2016ஆம் ஆண்டு செப்டெம்பர் 22ஆம் திகதி, மருத்துவமனையில் எதற்காக ஜெயலலிதா அனுமதிக்கப்பட்டார் என்ற விவரமும் எனக்குத் தெரியாது. அந்தசமயம் நான் சொந்த ஊரில் இருந்தேன். நள்ளிரவு நேரத்தில் எனது உதவியாளர் மூலமாகவே, ஜெயலலிதா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட செய்தியை தெரிந்துகொண்டேன். அடுத்தநாள் பிற்பகலில் அப்பலோ மருத்துவமனைக்குச் சென்று, அங்கிருந்த அப்போதைய தலைமைச் செயலாளரிடம் விவரங்களை முழுமையாக கேட்டறிந்தேன்” என்றார்.

“விசாரணை ஆணையகம் அமைக்க கோரியது யார்? விசாரணை ஆணையம் அமைக்க முடிவு செய்தது யார்” என்று ஆணையகத்தின் தரப்பில் கேள்வி எழுப்பப்பட்டது.

அதற்கு ஓ.பன்னீர்செல்வம், “பொதுமக்களின் எண்ணத்தின் அடிப்படையிலேயே விசாரணை ஆணையகம் அமைக்கப்பட்டது. துணை முதலமைச்சர் என்ற அடிப்படையில், விசாரணை ஆணையகம் தொடர்பான கோப்பில் கையெழுத்திட்டேன். மருத்துவமனையில் ஜெயலலிதா அனுமதிக்கப்படுவதற்கு முன்பாக, மெட்ரோ ரயில் நிகழ்ச்சியில் ஜெயலலிதாவைப் பார்த்தேன். அதன்பிறகு நான் அவரை பார்க்கவில்லை” என்று அவர் கூறியுள்ளார்.

முன்னதாக, ஆணையகத்தின் விசாரணைக்கு ஆஜராகியிருந்த இளவரசி, “ஜெயலலிதா சிகிச்சை பெற்று வந்த அப்பலோ மருத்துவமனைக்கு 75 நாள்களும் சென்றபோதும், ஜெயலலிதாவை ஓரிரு முறை, கண்ணாடி வழியாக மட்டுமே பார்த்தேன். 2014ஆம் ஆண்டில் சிறைக்குச் சென்றபோது, மன உளைச்சலில் ஜெயலலிதா இருந்தார். அதேபோல், 2016ஆம் ஆண்டு சட்டமன்ற தேர்தலின் போது, அவர் உடல்நலக்குறைவுடன் இருந்தார். மருத்துவமனையில் ஜெயலலிதா சிகிச்சை பெற்று வந்தபோது, சசிகலா மட்டுமே அவருடன் இருந்து பார்த்துக் கொண்டார்” என்று தெரிவித்திருந்தார்.

மேகாலயா

வைத்தியசாலைகளில் பிரசவம் பார்க்க மறுப்பு;

## 877 சிசுக்கள், 61 கர்ப்பிணிகள் உயிரிழப்பு

மேகாலயா மாநிலத்தில் அதிக எண்ணிக்கையிலான கர்ப்பிணிப் பெண்கள், குழந்தைகளின் இறப்புகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து மேகாலயா தேசிய மனித உரிமைகள் ஆணைக்குழு வெளியிட்ட அறிக்கையில், “புதிதாகப் பிறந்த குழந்தைகளின் இறப்புக்கான காரணங்கள் குறித்து ஆராயப்பட்டபோது, சரியான மருத்துவ கவனிப்பு இல்லாததால் உயிரிழப்புகள் ஏற்பட்டதாகக் கண்டறியப்பட்டது.

அத்துடன், கொரோனா நோய்த் தொற்று பரவலால் ஏற்பட்ட பயம் காரணமாக



தங்களை மருத்துவமனைகளில் அனுமதிக்க மறுத்துவிட்டனர் எனவும், கொரோனா பரிசோதனை செய்ய மறுத்துவிட்டனர் எனவும் கர்ப்பிணிகள் குற்றம் சாட்டியுள்ளனர்.

இதனால் சுமார் 877 சிசுக்களும் 61 கர்ப்பிணிகளும் உயிரிழந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பீகார்

## மது அருந்திய 18 பேர் மரணம்

### பலர் வைத்தியசாலையில் அனுமதி

பீகார் மாநிலத்தில் உள்ள நான்கு மாவட்டங்களில் கள்ளச்சாரயம் குடித்த 18 பேர் உயிரிழந்தனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பீகாரில் ஹோலி கொண்டாட்டத்தின்போது, கள்ளச்சாராயம் குடித்த மாதேபுரா, பாகல்புர், பங்கா, முர்ளிகஞ்ச் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்தவர்களே இவ்வாறு உயிரிழந்துள்ளனர் எனவும், பலர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2016ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் பீகார் மாநிலத்தில் மதுவிலக்கு அமல்படுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

கர்நாடகா

## நவீனின் உடல் வந்தது

உக்ரேனில் உயிரிழந்த இந்திய மருத்துவ மாணவன் நவீன் சேகரப்பாவின் உடல் நேற்று (21) அதிகாலை பெங்களூர் விமான நிலையத்துக்கு இராணுவ பாதுகாப்புடன் கொண்டு வரப்பட்டது.

இதையடுத்து அவரது சடலத்தை பெற்றோரும் இராணுவ அதிகாரிகளும் விமான நிலையத்தில் பெற்றுக் கொண்டனர்.

இந்நிலையில், நவீனின் உடலுக்கு கர்நாடக முதலமைச்சர் பசவராஜ் பொம்மை அஞ்சலி செலுத்தியதோடு நவீனின் சடலத்தை இந்தியா கொண்டு வர உத்தரவிட்ட பிரதமர் மோடிக்கும் நன்றி தெரிவித்தார்.

இதனையடுத்து



நவீனின் சடலமானது அவரது சொந்த ஊருக்குக் கொண்டு செல்லப்பட்டு, இறுதிச்சடங்குகள் மேற்கொள்ளப்பட உள்ளதாகவும், பொதுமக்களின் அஞ்சலிக்குப் பின்னர் அவரது உடலை மருத்துவமனைக்குத் தானமாக வழங்கப்பட உள்ளதாகவும் அவரது குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர்.

கேரளா

தனது குடும்பத்தையே

## எரித்துக் கொன்ற முதியவர்

முதியவர் ஒருவர் தனது மகன், மருமகள், இரண்டு பேத்திகளை உயிரோடு எரித்துக் கொன்ற சம்பவம் கேரளாவில் இடம்பெற்றுள்ளது.

கேரள மாநிலம், இடுக்கி மாவட்டம் தொடுபுழை சீனிக்குழியை சேர்ந்தவர் ஹமீது. 79 வயதான இவர், தனது மகன் முஹம்மது பைசல், மருமகள் ஷீபா, பேத்திகள் மெஹர் , அஸ்னா ஆகியோரோடு வசித்து வந்துள்ளார்.

இந்நிலையில் தந்தைக்கும் மகனுக்கும் இடையே சொத்து தகராறால் அடிக்கடி கடும் வாக்குவாதம் ஏற்பட்டு வந்ததாகவும் இந்நிலையில் மகன் மீது ஆத்திரமடைந்த தந்தை, கடந்த 18 ஆம்திகதி இரவு மகன், பேத்திகளின் அறையை வெளிப்புறமாக பூட்டி விட்டு, கதவுக்குக் கீழாக பெற்றோலை ஊற்றி தீ வைத்திருந்தார். தீயில் கருகி நான்கு பேரும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர். மேலும், தந்தை தன்னுடைய உறவினரிடம் அலைபேசியில் “மகனின் குடும்பத்தினரை உயிரோடு தீ வைத்து கொன்று விட்டேன்” எனக் கூறியுள்ளார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மன்னிப்பு கேட்க மறுப்பு

நடிகை மனிஷா யாதவ் தான் கூறிய பொய் குறித்து மன்னிப்பு கேட்க மாட்டேன் என்று தெரிவித்து யோகா செய்யும் வீடியோ ஒன்றை வெளியிட்டுள்ள நிலையில் அந்த வீடியோ தற்போது வைரல் ஆகி வருகிறது.

‘வழக்கு எண் 18/9’ என்ற திரைப்படத்தின் மூலம் நடிகையாக அறிமுகமானவர் மனீஷா யாதவ். அதன் பின்னர் அவர் “ஆதலினால் காதல் செய்வீர். ஜன்னல் ஓரம். திரிஷா இல்லைனா நயன்தாரா. ஒரு குப்பை கதை” உள்ளிட்ட சில திரைப்படங்களில் நடித்தார்.

தொடர்ந்து, சமூக வலைதளங்களில் மனிஷா யாதவ் அவ்வப்போது வெளியிடும் வீடியோ மற்றும் புகைப்படங்கள் வைரலாகி வரும்.

இந்த நிலையில் மனிஷா யாதவ் தனது இன்ஸ்டாகிராமில் வீடியோ ஒன்றை வெளியிட்டுள்ளார். அந்த வீடியோவில் “நான் பிசியாக இருக்கின்றேன் என்று பொய் கூறினேன், ஏனென்றால் நான் அவர்கள் நினைத்த வேலையை செய்யவில்லை.

என்னுடைய மனதை சரி செய்யவும், என்னுடைய மனதை ஒருமுகப்படுத்தவும் முயற்சி செய்து வந்தேன். இந்த பொய்யை கூறியதற்காக நான் மன்னிப்பு கேட்க மாட்டேன்” என்று பதிவு செய்து யோகா செய்யும் வீடியோவையும் பதிவு செய்துள்ளார்.





## அஜித் போட்ட கண்டிஷன்

நடிகர் அஜித் அடுத்ததாக இயக்குநர் விக்னேஷ் சிவன் இயக்கத்தில் லைக்கா தயாரிப்பில் நடிக்கவிருக்கிறார். அஜித்தின் 62 ஆவது திரைப்படத்தின் படப்பிடிப்பு இந்தாண்டு இறுதியில் ஆரம்பிக்கவுள்ளது. மேலும் விக்னேஷ் சிவனின் ஆஸ்தான இசையமைப்பாளரான அனிருத் இசையமைக்கின்றார்.

இந்த நிலையில் அஜித் இயக்குநர் விக்னேஷ் சிவனிடம் சில கண்டிஷன் போட்டுள்ளதாக தகவல்கள் வந்துள்ளன. அதாவது அஜித் மற்றும் விக்னேஷ் சிவன் இணையும் திரைப்படத்தில் ஒரு காட்சியில் கூட அரசியல் சார்ந்த வசனங்கள் இருக்கக்கூடாது என அஜித் கறாராக சொல்லிவிட்டாராம்.

ஏனென்றால் தற்போது பல திரைப்படங்களில் அரசியல் சார்ந்த வசனங்கள் பேசி சிக்கலில் சிக்கிவரும் நிலையில் தன் திரைப்படத்தில் எந்த ஒரு கதாபாத்திரமும் அரசியல் சார்ந்த வசனங்களை பேசக்கூடாது என விக்னேஷ் சிவனுக்கு கண்டிஷன் போட்டுள்ளாராம் அஜித்.

மேலும் திரைப்படத்தில் குடும்ப ரசிகர்களை ஈர்க்கும் செண்டிமெண்ட் காட்சிகளும் இருக்கவேண்டும் என விருப்பப்பட்டுள்ளாராம் அஜித்.

## தமன்னாவின் தாராளம்

நடிகை தமன்னா தற்போது மாலைத்தீவுக்குச் சுற்றுலா சென்றுள்ளார். அங்குள்ள கடற்கரையில் இவர் எடுத்துக்கொண்டுள்ள புகைப்படங்கள் இணையத்தில் தீயாய் பரவி வருகிறன.

கடந்த 2006 ஆம் ஆண்டு “கேடி“ திரைப்படத்தின் மூலம் தமிழில் அறிமுகமானவர்தான் நடிகை தமன்னா. மாஸ் ஹீரோக்களுடன் ஜோடி போட்டு நடித்துவிட்டார். அதேபோல தெலுங்கில் “பாகுபலி“ திரைப்படத்தில் செம கெத்தான நடிப்பைக் கொடுத்த இவர் அங்கும் முன்னணி நடிகையாக வலம் வருகிறார்.



## தனுஷுக்கு காத்திருந்த அதிர்ச்சி





சென்னையில் நடந்த இசைஞானி இளையராஜாவின் இசை நிகழ்ச்சியை தனுஷ் கண்டு ரசித்தார். அந்த நிகழ்ச்சிக்கு தன் மகன்கள் யாத்ரா மற்றும் லிங்காவை அழைத்துச் சென்றார். மேலும் மேடைக்கு சென்று இளையராஜாவிடம் அனுமதி கேட்டு தான் எழுதி வைத்த தாலாட்டு பாடலை பாடி அசத்தினார்.

இருப்பினும் அவர் நினைத்து பார்க்காத ஒன்று நடந்துவிட்டது. நிகழ்ச்சியில் வள்ளி திரைப்படத்தில் வந்த என்னுள்ளே என்னுள்ளே பாடல் பாடப்பட்டது. அந்த பாடல் பாடி முடிக்கப்பட்டதும் தனுஷை எழுந்து நிற்குமாறு கூறினார் இளையராஜா. இந்த பாட்டு பிடிச்சிருக்கா, இது நல்லா வர உன் மாமனார் தான் காரணம் என்றார் இளையராஜா.

இதை எதிர்பார்க்காத தனுஷ், பிடித்திருக்கிறது என்பது போன்று தலையை மட்டும் அசைத்துவிட்டு சிரித்தபடியே கைதட்டினார். நிம்மதியை தேடி இசை நிகழ்ச்சிக்கு சென்ற இடத்தில் இளையராஜா இப்படி கேட்பார் என்று தனுஷ் எதிர்பார்க்கவில்லை. தனுஷும், ஐஸ்வர்யா ரஜினிகாந்தும் பிரிந்து வாழ்கிறார்கள். அதனால் தான் இளையராஜா கேட்ட கேள்வி அனைவரின் கவனத்தையும் ஈர்த்துவிட்டது.

## அதிர்ச்சி கொடுத்த ஷ்ரேயா

பிரபல நடிகையான ஷ்ரேயா சரண், தனது குழந்தைக்கு பாலூட்டும் புகைப்படத்தை பகிர்ந்து ரசிகர்களின் விருப்பங்களை அள்ளி வருகிறார்.

தெலுங்கு சினிமாவின் மூலம் நடிகையாக அறிமுகமானவர் ஷ்ரேயா சரண். தொடர்ந்து தமிழ் மற்றும் ஹிந்தி மொழி திரைப்படங்களிலும் அறிமுகமாகி தனக்கென ஒரு இடத்தை வைத்துள்ளார்.

கடந்த 2018 ஆம் ஆண்டு ரஷ்யாவை சேர்ந்த தனது காதலரான ஆண்ட்ரேய் காஸ்சீவை திருமணம் செய்து கொண்டார். இந்த தம்பதிக்கு கடந்த ஆண்டு ஜனவரி 10 ஆம் திகதி பெண் குழந்தை பிறந்தது. பெண் குழந்தைக்கு ராதா என பெயர் வைத்துள்ளனர்.

குழந்தை பிறந்து பல மாதங்களுக்கு பிறகுதான் அதனை அறிவித்தார் ஷ்ரேயா. கர்ப்பமாக இருந்ததை கூட தெரிவிக்கவில்லை. அதுதொடர்பான புகைப்படங்களை வெளியிடாமல் ரகசியமாக வைத்திருந்தார்.

சமூக வலைதளங்களில் எக்டிவாக உள்ள ஷ்ரேயா சரண், தனது குழந்தைக்கு பாலூட்டும் புகைப்படத்தை தனது இன்ஸ்டா பக்கத்தில் பகிர்ந்துள்ளார். இதனை பார்த்த ரசிகர்கள் ஷ்ரேயாவை பாராட்டி வருகின்றனர்.





எல் கிளாசிகோ:

# றியல் மட்றிட்டை வீழ்த்திய பார்சிலோனா

ஸ்பானியக் கால்பந்தாட்டக் கழகங்களுக்கு இடையிலான லா லிகா தொடரில், எல் கிளாசிகோ என அழைக்கப்படும் றியல் மட்றிட் மற்றும் பார்சிலோனாவுக்கு இடையிலான போட்டியில், றியல் மட்றிட்டின் மைதானத்தில் நேற்று அதிகாலை நடைபெற்றதில் 4-0 என்ற கோல் கணக்கில் றியல் மட்றிட்டை பார்சிலோனா வீழ்த்தியது.




பார்சிலோனா சார்பாக, பியர்-எமெரிக்-உபமெயாங்க் இரண்டு கோல்களையும், றொனால்ட் அரவுஜோ, பெரன் டொரஸ் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.

அந்தவகையில், லா லிகா புள்ளிகள் பட்டியலில் 66 புள்ளிகளுடன் முதலாமிடத்தில் றியல் மட்றிட் காணப்படுகின்றது. 57 புள்ளிகளுடன் இரண்டாமிடத்தில் செவிய்யாவும், 54 புள்ளிகளுடன் மூன்றாமிடத்தில் பார்சிலோனாவும், நான்காமிடத்தில் அத்லெட்டிகோ மட்றிட்டும் காணப்படுகின்றன. இதில் பார்சிலோனா ஒரு போட்டி குறைவாக விளையாடியுள்ளது.



மேற்கிந்தியத் தீவுகள் எதிர் இங்கிலாந்து:

## வெற்றி தோல்வியின்றி முடிவடைந்த 2ஆவது டெஸ்ட்

மேற்கிந்தியத் தீவுகளுக்கெதிரான மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில், பார்படோஸில் கடந்த புதன்கிழமை ஆரம்பித்து நேற்று அதிகாலை முடிவுக்கு வந்த இரண்டாவது டெஸ்டை வெற்றி தோல்வியின்றி இங்கிலாந்து முடித்துக் கொண்டது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: இங்கிலாந்து

இங்கிலாந்து: 507/9 (துடுப்பாட்டம்: ஜோ றூட் 153, பென் ஸ்டோக்ஸ் 120, கிறிஸ் வோக்ஸ் 41, பென் போக்ஸ் 33, அலெக்ஸ் லீஸ் 30 ஓட்டங்கள். பந்துவீச்சு: வீராசாமி பெருமாள் 3/126, கேமார் றோச் 2/68, ஜேடன் சியல்ஸ் 1/55, ஜேஸன் ஹோல்டர் 1/76, அல்ஸாரி ஜோசப் 1/109, கிறேய்க் பிறத்வெய்ட் 1/59)

மே. தீவுகள்: 411/10 (துடுப்பாட்டம்: கிறேய்க் பிறத்வெய்ட் 160, ஜெர்மைன் பிளக்வூட் 102, ஷமராஹ் ப்ரூக்ஸ் 39, ஜோஷுவா டா சில்வா 33 ஓட்டங்கள். பந்துவீச்சு: ஜேக் லீச் 3/118, பென் ஸ்டோக்ஸ் 2/65, சஹிப் மஹ்மூட் 2/58, கிறிஸ் வோக்ஸ் 1/51, மத்தியூ பிஷர் 1/67, டான் லோரன்ஸ் 1/21)

இங்கிலாந்து: 185/6 (துடுப்பாட்டம்: டான் லோரன்ஸ் 41, ஸக் குறோலி 40, ஜொனி பெயார்ஸ்டோ 29, அலெக்ஸ் லீஸ் 24 ஓட்டங்கள். பந்துவீச்சு: வீராசாமி பெருமாள் 2/29, ஜேடன் சியல்ஸ் 2/34, கேமார் றோச் 1/31, அல்ஸாரி ஜோசப் 1/45)

மேற்கிந்தியத் தீவுகள்: 135/5 (துடுப்பாட்டம்: கிறேய்க் பிறத்வெய்ட் ஆ.இ 56, ஜோஷுவா டா சில்வா ஆ.இ 30, ஜெர்மைன் பிளக்வூட் 27 ஓட்டங்கள். பந்துவீச்சு: ஜேக் லீச் 3/36, சஹிப் மஹ்மூட் 2/21)

போட்டியின் நாயகன்: கிறேய்க் பிறத்வெய்ட்

பங்களாதேஷில் நடைபெறும் சர்வதேச கபடிப் போட்டியில்

## போட்டியின் நாயகனான மட்டு. இளைஞன் தனூஸன்




■ அஸ்ஹர் இப்றாஹீம்

பங்களாதேஷ் நாட்டில் நடைபெற்றுவரும் 2022ஆம் ஆண்டுக்கான பங்கபந்து கிண்ணத்துக்கான சர்வதேச கபடிப் போட்டியின் இலங்கை அணிக்கான இரண்டாவது போட்டியில் இங்கிலாந்து அணியை இலங்கை கபடி அணி 44-19 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றிபெற்றுள்ளது.

இப்போட்டியில் நாயகனாக மட்டக்களப்பைச் சேர்ந்த தனூஸன் தெரிவு செய்யப்பட்டார்.

இரண்டாவது ஒருநாள் சர்வதேசப் போட்டியில்

## பங்களாதேஷை வீழ்த்திய தென்னாபிரிக்கா

பங்களாதேஷுக்கெதிரான இரண்டாவது ஒருநாள் சர்வதேசப் போட்டியை தென்னாபிரிக்கா வென்றுள்ளது.

மூன்று போட்டிகள் கொண்ட தொடரில், ஜொஹன்னஸ்பேர்க்கில் நேற்று முன்தினம் நடைபெற்ற இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற பங்களாதேஷின் அணித்தலைவர் தமிம் இக்பால், தமதணி முதலில் துடுப்பெடுத்தாடும் என அறிவித்தார்.

அந்தவகையில், முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ், ககிஸோ றபாடாவிடம் 5 விக்கெட்டுகளைப் பறிகொடுத்து 50 ஓவர்களில் 9 விக்கெட்டுகளை இழந்து 194 ஓட்டங்களையே பெற்றது. துடுப்பாட்டத்தில், அஃபிஃப் ஹொஸைன் 72 (107), மெஹிடி ஹஸன் மிராஸ் 38 (49) ஓட்டங்களைப் பெற்றிருந்தனர்.

பதிலுக்கு, 195 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்கா, குயின்டன் டி கொக்கின் 62 (41), கைல் வெரைன்னேயின் ஆட்டமிழக்காத 58 (77) ஓட்டங்களோடு 37.2 ஓவர்களில் வெற்றியிலக்கையடைந்தது.

இப்போட்டியின் நாயகனாக றபாடா தெரிவானார்.

## பஹ்ரேய்ன் குரான் பிறீ: வென்றார் லெக்கலெர்க்

பஹ்ரேய்ன் குரான் பிறீயை பெராரி அணியின் சார்ள்ஸ் லெக்கலெர்க் வெற்றி கொண்டார்.




பந்தயத்தை முதலாமிடத்திலிருந்து ஆரம்பித்த மொனாக்கோவின் லெக்கலெர்க், நடப்புச் சம்பியனான மக்ஸ் வெர்ஸ்டப்பனுடன் போட்டிகளைக் கொண்டிருந்ததுடன் பின் முன்னிலை பெற்று அவர் விலக வெற்றி பெற்றிருந்தார்.

இரண்டாமிடத்தை லெக்கலெர்க்கின் சக பெராரி அணி ஓட்டுநரான கார்லோஸ் சைன்ஸ் பெற்றதுடன், மூன்றாமிடத்தை மெர்சிடிஸ் அணியின் லூயிஸ் ஹமில்டன் பெற்றிருந்தார்.

சீனா

# 133 பயணிகளுடன் சென்ற விமானம் விபத்து

133 பேருடன் பயணித்த, சீனாவின் ஈஸ்டர்ன் எயார்லைன்ஸ் நிறுவனத்துக்குச் சொந்தமான போயிங் 737 விமானம், மலையில் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது என, சீனாவின் அரச ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

அந்நாட்டின் குன்மிங் நகரில் இருந்து வுஜோ நகருக்கு நேற்று (21) புறப்பட்ட வமானம், குவாங்சி மாகாணத்தில் உள்ள மலைபகுதியில் பறந்துகொண்டிருந்தபோது எதிர்பாராத விதமாக மலைமீது மோதி விபத்துக்குள்ளானது.

இதனையடுத்து விமானத்தில் பெரும் தீ விபத்து ஏற்பட்டதாகவும் இந்த விபத்தை தொடர்ந்து சம்பவ இடத்துக்கு






மீட்புக்குழுவினர் விரைந்து சென்றுள்ளனர் என்றும் செய்தி வெளியாகியுள்ளது.

எனினும், விமானத்தில் பயணித்த 133 பேருக்கு என்ன நடந்தது என்பது குறித்து இதுவரை எந்த தகவலும் வெளியாகவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

பெல்ஜியம்

## மிகப்பெரிய போர்க்குற்றம் செய்கிறது ரஷ்யா

### ஐரோப்பிய ஒன்றியம் கண்டனம்



உக்ரேனில் மரியபோலில் அனைத்தையும் அழித்தமை, குண்டுவீசி அனைவரையும் கொன்றமை என இப்போது நடப்பது ஒரு மாபெரும் போர்க் குற்றமாகும் என்று ஐரோப்பிய ஒன்றியத்தின் வெளியுறவுக் கொள்கை செயலாளர் ஜோசப் போரெல் தெரிவித்தார்.

உக்ரேனில் தொடர்ந்து தாக்குதல் நடத்தில் வரும் ரஷ்யா மீது மேலதிக பொருளாதார தடைகள் விதிப்பது பற்றி ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள் கூட்டம் பிரஸ்ஸல்ஸில் நடைபெற்றது.

அந்தக் கூட்டத்தில் பேசிய லிதுவேனியா மற்றும் அயர்லாந்தின் வெளியுறவு அமைச்சர்கள், “ரஷ்யா மீதான, குறிப்பாக அதன் இலாபகரமான எரிசக்தி துறையை இலக்காகக் கொண்டு, பொருளாதாரத் தடைகளை ஐரோப்பிய ஒன்றியம் அதிகரிக்க வேண்டும்” என்று தெரிவித்துள்ளனர்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் பெரும்பாலான நாடுகள் அவற்றின் 40% எரிவாயுவுக்கு ரஷ்யாவை நம்பியுள்ளன. இந்நிலையில் , ரஷ்ய எண்ணெயை குறிவைப்பது என்பது 27 நாடுகளை கொண்ட ஐரோப்பிய ஒன்றியத்துக்கு கடினமான தெரிவாகும்.

ஆனால் அமெரிக்கா மற்றும் பிரித்தானியா ஆகியவை ரஷ்யாவிலிருந்து எண்ணெய் இறக்குமதியை முற்றிலும் தடை செய்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

அமெரிக்கா

## பிரபல ஹொலிவூட் நடிகை மீது இனவெறி தாக்குதல்

அமெரிக்காவில் அண்மைக்காலமாக ஆசிய, அமெரிக்கர்கள் மீதான இனவெறி தாக்குதல்கள் அதிகரித்து வருகின்றன.






குறிப்பாக, கடந்த 2020ஆம் ஆண்டுக்கு பின்னரே இவ்வாறான தாக்குதல்கள் இடம்பெற்று வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் பிரபல ஹொலிவூட் நடிகையொருவர் தன்மீது இனவெறித்தாக்குதல் இடம்பெற்றுள்ளதாகத் தெரிவித்துள்ள சம்பவம் உலகளவில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

‘தி பாய்ஸ்’ மற்றும் ‘சூசைடு ஸ்க்வாட்’ ஆகிய படங்களில் நடித்து பிரபலமானவர் நடிகை கரென் புகுஹரா(KarenFukuhara).

ஜப்பான் வம்சாவளியை சேர்ந்த இவர் அண்மையில் ”தன்மீது இனவெறி தாக்குதல் நடத்தப்பட்டதாக” தனது சமூக வலைத்தளப் பக்கத்தில் தெரிவித்திருந்தார்.

“ஆசிய இனவெறியை நிறுத்துங்கள்” என்ற ஹேஷ்டேக்குடன் வெளியிட்ட குறித்த பதிவில் ” நான் ஒரு ஹோட்டலில் இருந்து வெளியே வந்தபோது, எதிரே வந்த நபர் எனது தலையில் தாக்கினார். அத்துடன் எனது இனத்தை இழிவுப்படுத்தும் வார்த்தைகளால் திட்டினார். கடந்த காலங்களில் இனரீதியான அவதூறுகள் மற்றும் புண்படுத்தும் செயல்களால் நான் பாதிக்கப்பட்டிருந்தாலும், உடல் ரீதியாக நான் பாதிக்கப்படுவது இதுவே முதல் முறை” இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் அவரது பதிவானது இணையத்தில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அமெரிக்கா

## உயர்நீதிமன்றத்தில் முதல் கறுப்பின பெண் நீதிபதி

அமெரிக்க உயர்நீதிமன்றத்தில் முதன்முறையாக கறுப்பின பெண் ஒருவர் நீதிபதியாகப் பொறுப்பேற்றகவுள்ளார். கறுப்பின பெண்ணான கேடான்ஜி பிரவுன் ஜக்சன் என்பவரை, புதிய நீதிபதியாக நியமிக்க அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் அனுமதி வழங்கினார்.

அவருடைய அனுமதிக்குப் பின்னர் அமெரிக்க செனட் உறுப்பினர்கள் வாக்கெடுப்பு நடத்தி அதன்பின் தான் அவர் நீதிபதியாக தெரிவுசெய்யப்படவுள்ளார்.

இந்நிலையில், கறுப்பின பெண்ணை நீதிபதியாக நியமிக்க நேற்றையதினம் வாக்கெடுப்பு இடம்பெற இருந்தது.

100 உறுப்பினர்களைக் கொண்ட அமெரிக்க செனட் சபையில், ஜனநாயகக் கட்சியினருக்கும் குடியரசுக் கட்சியினருக்கும் இடையே 50-50 என சமமாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஜக்சனை நீதிபதியாக நியமிக்க தொடக்கத்திலிருந்தே ஜனநாயகக் கட்சி எதிர்ப்பு தெரிவித்து வருகின்றது.

ரஷ்யா

## ரஷ்யா அதிரடி; அதிர்ச்சியில் உலக நாடுகள்

நேட்டோ அமைப்பில் உக்ரேன் இணைவதற்கு எதிர்ப்பு தெரிவித்து அந்நாட்டின் மீது ரஷ்யா 25 ஆவது நாளாகத் தொடர்ந்து தாக்குதல் நடத்திவருகின்றது.



அதேசமயம் உக்ரேன் மீதான ரஷ்யாவின் தாக்குதல்களுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் விதமாக அந்நாட்டின் மீது அமெரிக்கா, பிரித்தானிய உள்ளிட்ட பல நாடுகள் அடுக்கடுக்கான பொருளாதாரத் தடைகளை விதித்து வருகின்றன.

புகழ்பெற்ற தொழில்நுட்ப நிறுவனங்களா மைக்ரோசொப்ட், அப்பிள், ஐ.பி,எம் மற்றும் சர்வதேச பணப்பரிவர்த்தனை நிறுவனங்களான விசா மற்றும் மாஸ்டர் கார்ட், அத்துடன் நெட்பிளிக்ஸ், டிக்டொக்‘உள்ளிட்ட பல நிறுவனங்கள் தமது சேவையை ரஷ்யாவில் நிறுத்தியுள்ளதாக அறிவித்துள்ளன.

இந்நிலையில் ரஷ்ய நாடாளுமன்ற உறுப்பினர் எவ்ஜெனி ஃபெடோரோவ், “மே மாதம் 1 ஆம் திகதி வரை நாட்டின் சந்தைக்குத் திரும்பாத வெளிநாட்டு நிறுவனங்களுக்கு 10 ஆண்டுகள் தடை விதிக்கப்பட வேண்டும் ”என்ற ஒரு சட்ட வரைவை முன்மொழிந்துள்ளார் “ எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்செய்தியானது உலக நாடுகளிடையே பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிடெட்டினால் செவ்வாய்க்கிழமை, 22 மார்ச் 2022, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.